



PK (1).JPG

# நெஞ்சோடு நெஞ்சம்



1

அடக்கு முறை அல்லி தர்பார் தொடங்கியாயிற்று!

உள்ளூரப் பொங்கிய ஆத்திரம் தாளாமல், அம்மா அப்பா இருவரையும் முறைத்துப் பார்த்த மாயா சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். இல்லாவிட்டால் அதற்கு வேறு திட்டு வாங்க வேண்டும்.

ஆனால் மகள் முகத்தில் பார்வையைப் பதித்திருந்த சுசீலா, அதற்குள் அந்தப் பார்வையைக் கண்டுவிட்டு, "நல்லதுக்குச் சொன்னால் புத்தியில் ஏற்றால்தானே? எல்லாம் அன்றைக்கு நீங்கள் கொடுத்த இடம்" என்று கணவரிடம் எரிந்து விழுந்தாள். "வைத்திருக்கிற பெயரைப் பாருங்கள், மாயா, காயா என்று; நல்லபடியாய் ஒரு சரஸ்வதி, லட்சுமி

PK (2).JPG

என்று பெயர் வைத்திருந்தால் புத்தி இப்படி புழுதி அளையப் போகுமா? அருமை மகள் ஆசை மகள் என்று கொஞ்சினீர்கள். இன்றைக்கு அடி மடியில் நெருப்பை வைத்து விட்டு வெறித்து வேறு பார்க்கிறாள்!" என்று அன்னை மேலும் அங்கலாய்க்கவும் மகள் சோர்ந்து போனாள்.

அன்று அசட்டுத் தனமாகச் செய்த அந்த ஒரு பிழைக்கு இந்தப் பெற்றோரிடமிருந்து என்றேனும் மன்னிப்புக் கிடைக்குமா? பெற்ற பாசத்தால் ஒரு வேளை மன்னித்தாலும் கூட, என்றேனும் இவர்கள் அதை மறக்கக் கூடுமோ?

மூன்று ஆண்டுகள்! முழுவதுமாக மூன்று வருடங்கள் முடிந்த பிறகும் அவர்கள் நிலையில் சற்றும் வேறுபாடு தெரியவில்லையே!

அவளும்தான் சும்மா இருந்து விட்டிருக்கலாம் இப்போது அவளுடைய தோழிகள் இந்துமதி, ரூபிணி எல்லாம் இல்லையா? நல்ல நல்ல பெண்களாக. அப்பா அம்மா எதிர்பார்ப்பதை மட்டும் செய்து கொண்டு குறைந்த பட்சம் அவர்களுக்குத் தெரியும் அளவில் அப்படி நடந்து நல்ல பிள்ளைகளாகக் காட்டிக் கொள்ளவில்லையா? பெற்றோர் அறியாமல் அவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்! ஆனால் வெளிக்குத் தெரியாமல் மறைத்துச் சாது போல இருக்கவில்லையா? மாயா மட்டும் ஏன் முட்டாளாகிப் போனாள்?

இப்போது எல்லோருக்கும் துன்பம். அவளுக்கு மட்டும் இல்லாமல், அவளுடைய பெற்றோருக்கும். மெல்லிய குரலில், "சாரிம்மா!" என்றாள் மாயா.



"ஆமாம்.. இது ஒரு வார்த்தை. செய்வதெல்லாம் செய்து விட்டு, 'சாரி' என்று தளுக்காக ஒரு வார்த்தை இலகுவாகச் சொல்லிவிட்டுக் குஷாலாகப் போய் விடுவீர்களே!" என்று அதற்கும் அன்னை எரிந்து விழவும். அதற்கு மேல் முயற்சியைக் கைவிட்டு விட்டுப் பேசாமல் தலை குனிந்து நின்றாள் மகள்.

இன்றைக்கு உள்ளூர மனம் முரண்டத் தொடங்கியது.

அப்படி என்ன உலகமகாத் தப்பு மாயா செய்து விட்டாள்? வீடியோ பார்ப்பது ஒரு பெரிய பிழையா? அது தப்பு என்றால், முதலில் இவர்கள் வீ.சி.ஆர். வாங்கி இருக்கக் கூடாது. வீடியோ காசட் எடுத்து வைத்திருக்கக் கூடாது. எல்லாம் தயாராக வைத்து விட்டு இவர்கள் பாட்டில் அரை நாளுக்கும் மேலாக, ஜாலியாக வெளியே சுற்றிவிட்டு வருவார்கள். இவள் மட்டும் அதை தொட்டுக் கூட பார்க்கக் கூடாதாக்கும்?

வாடிய தாமரைபோல் மகள் சோர்ந்து நின்ற கோலம் சாரங்கனைப் பாதித்திருக்க வேண்டும். "சரி.. சரி போய் உன் அறையில் உட்கார்ந்து படி. வாசலில் வெளியில் நின்று வம்பை இழுத்துக் கொண்டிராதே. போ" என்று அதட்டலாகவே கூறி அனுப்பி வைத்தார்.

பிடிவாதத்துடன், அவர்கள் முன்னிலையில் மாயா அடக்கி வைத்த கண்ணீர், அவளது அறையை அடைந்ததும் சொட்டு சொட்டாய் வடியலாயிற்று.

இது வீடியோ பார்த்ததற்காக விழுந்த திட்டு அல்ல. அது ஒரு சாக்கு மட்டுமே. வேண்டாத மருமகள் நின்றாலும் தப்பு; உட்கார்ந்தாலும் பிழை என்பது போல அவள் என்ன

PK (3).JPG

செய்தாலும் அதில் குற்றம் கண்டாக வேண்டும் என்ற உந்துதலில் வந்தது.

இப்போது அறையில் உட்கார்ந்து படித்தால் மட்டும் விட்டுவிடப் போகிறார்களா? நிச்சயமாக இல்லை. பத்து நிமிடங்களில் அம்மாவாக இருந்தால் அறைக்குள் எட்டிப் பார்ப்பார்கள்; அப்பாவாயிருந்தால் கதவைத் தட்டி அழைப்பார். அழைத்து, "சும்மா உட்கார்ந்து என்ன செய்கிறாய்? புத்தகத்தை முன்னே விரித்து வைத்துக் கொண்டு வேண்டாத கனவுகளில் மூழ்கிவிட்டாயா?" என்பார்கள். அடுத்த படியாக, "உருப்படியாக ஒன்று செய்யத் தோன்றாதே! வேண்டாத கற்பனை வீணான வேலை.." என்று தொடரும்.

முடிவே இல்லாத சித்திரவதை; அவளுக்கு மட்டுமில்லாமல், அவர்களுக்கும் சேர்த்துதான். அவளைத் திட்டி அழவைத்துவிட்டு அவர்களும் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருப்பதில்லை. வீடு முழுமைக்கும் முடிவே இல்லாத வேதனை.

இது முடியவேண்டுமானால் ஒன்று அவள் செத்துப்போக வேண்டும். சாவைப்பற்றி எண்ணிப் பார்க்க எப்போதுமே அவளுக்குப் பயமாக இருக்கும். அடுத்த வழியில் அவள் அந்த வீட்டை விட்டு வெளியேறியாக வேண்டும்.

ஆனால் அந்த வீட்டை விட்டு வெளியேற என்று வீட்டுப் படிதாண்டி ஓர் அடி எடுத்து வைப்பதும் இனி அவளுக்குச் சாத்தியமான காரியம் அல்ல.

எனவே இந்த நரகத்துக்கு முடிவே கிடையாதுதான். என்ன குட்டு விழுந்தாலும் பட்டுக்கொண்டே கிடப்பதுதான்



அவளது தலை விதி. அவளே எழுதிக் கொண்ட தலையெழுத்து.

சோர்வுடன் பாடப் புத்தகத்தில் பார்வையை ஓட்டினாள் மாயா.

ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கலாம்.

கதவை உட்புறம் தாளிடக்கூடாது என்பது மாயாவுக்குப் பெற்றோரால் இடப்பட்டிருக்கும் கட்டளை. கதவைத் தள்ளித் திறக்கும் ஒலியோடு "புத்தகத்தை முன்னே வைத்துக் கொண்டு என்ன வேண்டாத விபரீதங்களை யோசித்துக் கொண்டு இருக்கிறாய்?" என்று சுசீலாவின் குரலும் கேட்டது.

பதிலாக கையிலிருந்த புத்தகத்தை ஒன்றாம் வகுப்பு மாணவிபோல உரக்கப் படிக்கத் தொடங்கினாள் மாயா.

பொதுவாக, இந்த மூன்று ஆண்டுகளாக மாயாவை அவளுடைய பெற்றோர் வெளியே எங்கும் அழைத்துச் செல்வது கிடையாது. தவிர்க்க முடியாத சில குடும்ப விசேஷங்கள் மட்டும் விதிவிலக்கு. அப்போதும் அவளுக்கு ஆயிரம் கட்டுப்பாடுகள் உண்டு. அம்மாவை விட்டு அங்கே இங்கே அகன்று செல்லக் கூடாது; உடன் ஒத்தவர்களோடு ஓடியாடக் கூடாது உரக்கச் சிரிக்கக்கூடாது. அம்மாவை ஒத்தவர்களோடு அவள் ஏதேனும் முக்கியமாகப் பேசும் போது (ஊர்வம்பு என்பது மாயா அந்தப் பேச்சுக்குச் சூட்டியிருக்கும் பெயர்) அந்தச் சமயம் மட்டும் குறிப்பறிந்து அவள் விலகிச் சென்றுவிட வேண்டும்.

PK (4).JPG

அப்போதும் கூட அந்தப் பேச்சு காதில் விழாத தூரம் செல்ல வேண்டுமே தவிர அம்மாவின் கண்பார்வை படக்கூடிய இடத்தில்தான் இருக்க வேண்டும்.

அவளுக்கு இணையான மற்ற உறவுக்கார பெண்கள் எல்லாம் பளபளவென்று அலங்காரமும், சிரிப்புமாகப் பட்டாம் பூச்சிகளாகச் சுற்றுவதைக் காணும்போது மாயாவுக்கு ஏக்கமாக இருக்கும். மாயாவுக்கு ஆடை அணிகளில் அவளுடைய பெற்றோர் குறை வைத்தது இல்லை. ஆனால் அவர்கள் மாயாவையும் தங்களோடு சேர்ந்து கொள்ள அழைப்பது உண்டு. ஆனால் உள்ளூர எவ்வளவோ ஆசையிருந்தும் பிற்பாடு வாங்கக்கூடிய ஏச்சுகளுக்குப் பயந்து மாயா ஒதுங்கி விடுவாள். ஆனால் அதுவே அவளைப் பிறர் தவறாக எண்ண ஏதுவாயிற்று என்பது அப்போது அவளுக்குத் தெரியாது.

அன்று இப்படித்தான் பெரியப்பா மகளுக்குத் திருமணம். திருமணத்திற்காகவும், அதைச் சார்ந்த மற்ற வைபவங் களுக்கும் சேர்த்து முந்தைய நாளே சென்றிருந்தார்கள்.

இரண்டு அடுக்காய் அமைந்த கல்யாண மண்டபம் அது. மாடியில் திருமண மேடையும், ஹாலும் அங்கேயே சுற்றிலும் தங்கும் அறைகள் கீழே உணவருந்தும் இடம்.

பெரியவர்கள் திருமண வேலைகளைக் கவனிக்க, சின்னவர்கள் ஜாலியாக அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

பெரியப்பா மகள் மாலினி மாயாவைவிட நாலு வயது பெரியவள். குடும்பத்தில் மூத்த பெண்ணும் கூட. எனவே எல்லாக் குடும்பங்களுமே அங்கே குழுமியிருந்தன.



சித்தப்பா வீட்டில், அத்தை வீட்டில், இன்னமும் இவர்களின் ஒன்றுவிட்ட உறவில் என்று மாயாவின் வயதிலும் சின்னவர்களாகவும் ஏழெட்டு பெண்களும், மேலும் கீழுமாக அதே அளவுப் பையன்களும் உண்டு. கேட்க வேண்டுமா?

கேலியும், கிண்டலும், சிரிப்புமாக மண்டபம் அமர்க்களப் பட்டது.

அழகியவிழிகளும், அடர்ந்த கருங்கூந்தலும், எழிலான மேனியுமான மாயாவிடம் எல்லோருக்குமே ஓர் ஈர்ப்பு உண்டு. எனவே எப்போதும் போல அவளையும் தங்களோடு கலந்து கொள்ளுமாறு அழைத்துவிட்டு அவளது சாக்கு போக்குகளைக் கேட்டு, ஒருவரை ஒருவர் பார்த்தபடியே உறவுக்கார இளைய தலைமுறை அகன்றது.

என்னதான் தந்தைக்குப் பயந்து ஒதுங்கிவிட்ட போதும், மாயாவின் பார்வை அவளது செட்டிடமே இருந்தது. திருமணம் நடந்து முடிந்து மண மக்களுக்குப் பரிசு கொடுத்து, சாப்பாடு முடிந்து எல்லோரும் இலகுவாக அமர்ந்திருந்த நேரம் அது. மாலை வரவேற்புக்கு இன்னமும் வெகு நேரம் இருந்தபடியால் பெரியவர்கள் குழுக்களாகப் பிரிந்து சற்றும் கூச்சமற்று அடுத்தவர் பிரச்சினைகளை அலசிக் கொண்டு இருந்தனர்.

அப்பாமார் சீட்டாட்டத்தில் தீவிரமாக இறங்கியாயிற்று.

மகள் இருக்கும் இடத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் ஓரகத்திகளுடன் சுசீலா ஓர் அறைக்குள் சென்று கதவைச் சாத்துவதைக் கவனித்த மாயாவுக்கு ஆத்திரம் வந்தது.

PK (5).JPG

மூவருமாகச் சேர்ந்து அத்தைகளை நார்நாராகக் கிழிக்கப் போகிறார்கள்.

ஏற்கனவே அண்ணன் தம்பிமார் குடும்பங்களைப் பற்றி விமர்சிக்க அத்தைமாரும் ஓரிடம் பார்த்து ஒதுங்கியாயிற்று என்பதால் இதில் பெரிதாக நினைக்க எதுவும் இல்லை தான்.

எப்படியோ தொலையட்டும்.

ஆனால் மாயா?

அவள் இப்போது என்ன செய்வதாம்?

அவள் இப்போது அம்மா இருக்குமிடம் செல்ல முடியாது; ஏனெனில் அங்கே பேசப்படுவது பிள்ளைகள் காதில் விழக் கூடாத விஷயங்கள்.

ஆனால் அன்னையின் கண்பார்வை எல்லை தாண்டி எங்கும் போகக் கூடாது என்பது கட்டளை.

வெளியே வீட்டுக் கதவை மூடிக் கொண்டு கண் பார்வையில் இரு என்றால் எப்படியாம்? அந்த அறைக் கென்ன கண்ணாடியாலா சுவர் கட்டியிருக்கிறது.

ஆத்திரத்தோடு தலையைச் சிலுப்பினாள் பெண். இந்தப் பெரிய மண்டபத்தில் அவள் மட்டும் அனாதை மாதிரித் தனியாக இருக்க வேண்டுமாக்கும். இருக்கட்டும்! எண்ணம் ஓடும் போதே வேறொரு யோசனை உண்டாயிற்று.

இந்த அம்மாமார் இனி இப்போதைக்குக் கதவைத் திறக்கப் போவதில்லை. மாலை வரவேற்புக்குத் தயாராக



வேண்டிய நேரம்வரை யாரும் அறையைவிட்டு அசையப் போவது இல்லை. இப்போதாவது மாயா, அவளுடைய பெற்றோருடைய உடன் பிறந்தோருடைய பிள்ளைகளோடு சேர்ந்து சிரிக்கலாமே!

ஐடியா தோன்றியதும், அரியதாய்க் கிடைத்த வாய்ப்பை விட்டுவிடக் கூடாது என்று அவர்களைத் தேடிக்கொண்டு கிளம்பி விட்டாள் அவள்.

இளையோர் கூட்டத்தைக் கண்டு பிடிப்பது கடினமாக இல்லை. ஓகோ என்று ஆர்ப்பாட்டமும் ஆரவாரமுமாக அவர்கள் எழுப்பிய சத்தமே அவர்கள் இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுத்தது.

அந்த அறை வாயில்வரை வேகமாகச் சென்றவள் தயங்கி நின்றாள்.

முன் தினம் காலையிலிருந்து எல்லோரிடமும் எத்தனை முறை என்னென்ன சாக்குப் போக்கு சொல்லியிருப்பாள்.

முன் மாலை மாப்பிள்ளை அழைப்புக்கு பிறகு எல்லோருமே சற்று ஒதுங்கிவிட்டாற் போலக் கூட மாயாவுக்கு ஓர் உணர்ச்சி. அதற்கு காரணம் இல்லையென்று சொல்லவும் முடியாது.

மணமகளின் அக்கா, தங்கை முறையில் உள்ள பெண்கள் எல்லோரும் மாப்பிள்ளை மண்டபத்துக்குள் வரும் போது ஆளுக்கு ஒரு விதமாய் அலங்கரித்த விளக்குகளைக் கொண்டு ஆலம் சுற்றுவது அவர்கள் குடும்ப வழக்கம். என்னென்ன மாதிரி வடிவங்களில் விளக்குகளை

PK (6).JPG

அடுக்கலாம்? என்ன உடைகளில் என்ன வரிசையில் ஆலம் சுற்றுவது என்றெல்லாம் எல்லோருமாகச் சேர்ந்து திட்ட மிடலாம் என்று சித்தப்பாமகள் நந்தினி வந்து மாயாவை அழைத்தாள். போக முடியாமல், வயிற்று வலி. எனக்காக நீங்களே முடிவு செய்து விடுங்கள் என்று சொல்லி விட்டு அசையாமல் இருந்தாளே! இப்போது அந்த நந்தினி மாயாவின் வரவை எப்படி ஏற்கக் கூடும்?

அந்த விவரம் தெரிய மாயாவுக்கு அதிக நேரம் ஆகவில்லை.

"ஊகூம். நான் வரவில்லை. எனக்கு ஒரே வயிற்று வலி எனக்காக நீங்களே முடிவு செய்யுங்கள். ஆனால் ஒன்று, இரவு விருந்தில் மட்டும் எட்டு பூரி, பத்து தோசை, பதினைந்து லட்டோடு ஒரு கிலோ ஐஸ்கிரீமும் எனக்குத் தந்து விட வேண்டுமாக்கும்" என்று நந்தினி கீச்சுக் குரலில் இழுத்துப் பேச எல்லோரும் 'ஓ' வென்று கைதட்டிச் சிரித்தனர்.

ஒருவேளை தன்னையில்லையோ என்று எழுந்த அற்ப சந்தேகத்தை அடுத்து ஒலித்த சரவணனின் குரல் போக்கியது. "ஊகூம்.நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். மாயாவின் குரல் ஒன்றும் இப்படிக் கீச் சென்று இராது. குயில் மாதிரித் தேன் குரல் அது. அத்தோடு அவள் அழகாய் இருப்பதால் உனக்குப் பொறாமை."

"அதெல்லாமில்லை. தான் அழகாய் இருப்பதாக அவளுக்குத்தான் கர்வம். நம்மோடெல்லாம் பழகக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை" என்று வேகத்துடன் பதில் சொன்னாள் நந்தினி.



அவள் பேசாதது போலப் பாவித்து, "கூடவே நீ என்ன மாதிரி வேண்டா வெறுப்பாய் அவளை அழைத்தாயோ? நான் போய்க் கூப்பிட்டிருந்தால் மாயா நிச்சயம் வந்திருப்பாள்" என்றான் சரவணன் தொடர்ந்து.

"ஓ...ய்!" என்று ஒருமிக்க பல குரல்கள் கேலியாகக் கத்தின; "மாயா மகள் இல்லையா? மச்சிக்கு மோகம் வந்துவிட்டது! மயங்...கி விட்டார்!" என்று யாரோ கூற எல்லோரும் பலக்க நகைத்தனர்.

சரவணன் மாயாவைவிட இரண்டு வயது பெரியவன். அந்தப் பயங்கர பதினாறு வயதுக்கு முன், இப்படி அவளும் சேர்ந்து கத்தி ரகளை செய்து வந்தவள்தான். எப்போதுமே அவன் அவள் பக்கம்தான். பாடமெல்லாம் கூட கற்றுக் கொடுப்பான். அவளுக்கு ஓர் அண்ணனைப் போல அவன்.

ஆனால் அதைக்கூட மோகம் கீகம் என்கிறார்களே! மோகம் என்றால் என்னவென்றே தெரியாத பேதைகள்!

"நீ என்னதான் சொன்னாலும் மாயா மாறி விட்டாள் தான். சின்ன வயதில் எவ்வளவு 'ஸ்வீட்டாக' சிரித்துக் கொண்டே இருப்பாள், நம்மோடெல்லாம் எப்படி விளையாடுவாள்! இப்போது முகம் பார்க்கும் கண்ணாடி மட்டும்தான் அவளுக்கு முழுநேரத் தோழி என்று எனக்குத் தோன்றுகிறது. தான் அழகாய் இருப்பது மட்டும் போதும் என்று நினைக்கிறாள்" என்றது இன்னொரு கீச்சுக்குரல்.

"ஆமாம் நாமும்தான் விடாமல் எத்தனை தரம் அவளை அழைத்து விட்டோம். அப்படி இவள் என்ன உயர்வு? இனி

PK (7).JPG

அவளாக வந்தாலும் யாரும் அவளோடு பேசாமல் விரட்டி விட வேண்டும்" என்றது பெரியப்பா மகனின் உடைந்து கொண்டிருந்த குரல்.

"ஆமாம். ஆமாம்" எல்லோரும் கோரஸ் பாடினார்கள்.

"உன்னைக் கிண்டலடித்தேனே தவிர எனக்கு கொஞ்ச நாளா சந்தேகம்தான், நந்தினி" என்றான் சரவணன்.

"முகத்தை நிமிர்ந்து பார்ப்பதுகூட இல்லைதான். அப்படி ஓர் அலட்சியம் மாயாவிடம் வந்து விட்டது உண்மை தான்"

கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்றபடி, காலியாகக் கிடந்த கல்யாண ஹாலுக்குச் சென்று, ஒரு புறமாய் அமர்ந்து கொண்டாள்.

என்ன அநியாயம்! எல்லோரும் அவளை எவ்வளவு தப்பாக எண்ணுகிறார்கள்!

நான் அப்படிப்பட்டவள் அல்ல. உங்கள் எல்லோருடனும் கலந்து பேசி விளையாடத்தான் எனக்கு ஆசை என்று வாய் கிழியக் கத்த வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

ஆனால் அப்படிச் செய்ய முடியாத காரணத்தால், விட்டத்தை வெறித்தபடி, கண்களில் நீர் ததும்ப, சோகப் பதுமையென அமர்ந்திருந்தாள் அவள்.

"டேம்ஸல் இன் டிஸ்ட்ரஸ் என்பார்கள். பார்த்துவிட்டு சும்மா போக மனமில்லை. தங்கள் துன்பம் தீர அடியேன் என்ன செய்யக்கூடும்? எதுவானாலும் கட்டளையிடுங்கள்" என்று அவள் முன் வந்து நின்று, மேல்நாட்டு பாணியில், ஒரு



கை மடித்து இடைவரை குனிந்து, வணங்கினான் ஓர் இளைஞன்.

குனிந்திருந்த தலையில் பளபளவென்று அடர்ந்து அலையலையாய் படிந்திருந்த கரும் கேசம். அதைக் கையால் களையும் ஆவலை அவளுள் தூண்டியது



2

ஒருபழங்கால ஆங்கிலேயன் போரின் முன்னே குனிந்து நின்றவனின் பாவனை மாயாவின் மனப் பாரத்தை வெகுவாகக் குறைத்து, காற்றில் பறக்கும் பஞ்சு போல் லேசாக்கியிருக்க வேண்டும். இல்லையென்றால் அவளால் அப்படிச் சட்டெனச் சிரிக்க முடிந்திராது. அவன் தலையைத் தொட்டுக் கேசத்தைக் களைவதை இலகுவாக எண்ணிப் பார்க்கவும் இயன்றிராது.

'களுக்' கெனச் சிரித்த பின்னரே சூழ்நிலை நினைவு வர சட்டெனக் கைகளால் வாயைப்பொத்தி சிரிப்பை நிறுத்தினாள்.

இன்னும் கொஞ்ச நேரம் சிரித்திருந்தால் அம்மா, அப்பா இருவரும் அதைக் கேட்டு, "இங்கே என்ன சத்தம் அனாவசியமாய்?" என்று அதட்டிக் கொண்டு வந்திருக்க மாட்டார்களா?



PK (8).JPG

மூன்று ஆண்டுகளாக முயன்று பயின்று வைத்திருந்த புலனடக்கத்தைப் பத்து வினாடிக்குள் பறக்கடித்து விட்டானே என்று ஆச்சரியத்துடன், முன்னே நிமிர்ந்து கொண்டிருந் தவனைப் பார்த்த மாயா மேலும் திகைத்தாள்.

சாதாரணமாக மற்ற பெண்களைவிட மாயா வளர்ந்திருந் தாள். ஆனால் அவளே அண்ணாந்து பார்க்கத் தேவைப்படும் அளவு உயரத்தில் அவன் இருந்தான்.

இந்த உயரத்தில் நின்று கொண்டு ஒற்றை புருவத்தைத் தூக்கி, கண்களில் சிரிப்பும் கேலியுமாக அவன் அவளை நோக்கவும் மாயா குழம்பிப் போனாள். "எ..என்ன?" என்று தடுமாறினாள்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். இந்த அழகான கயல்மீனை ஒத்த விழிகளில் கண்ணீர் வரும் அளவுக்கு என்ன கஷ்டம் என்று?"

மேலும் சற்றுத் திணறிவிட்டுக், "கண்ணீரா? கஷ்டமா? எனக்கா? சேச்சே.. ஏதோ கண்களில் தூசிபட்டு தண்ணீர் வந்தால் அதைப் போய்க் கஷ்டம், கண்ணீர் என்பதா?" என்று முடிந்த அளவு மிடுக்குடன் பேசிச் சமாளிக்க முயன்றாள் அவள்.

"ஓகோகோ! அப்படியா விஷயம்? இது தெரியாமல் ஏதேதோ எண்ணி விட்டேனே! சாரி!" என்று வருத்தப்பட்டான் புதியவன்.

"நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்க வேண்டும். ஏதோ கண்களில் தூசி என்றீர்களே! அதுவும் நியாயம் தான். சற்று முன் இந்த ஹாலுக்குள் ஒரு பயங்கரமான புழுதிப்



புயல் அடித்ததாமே! அந்தப் புயலில், உங்கள் கண்ணில் தூசி விழாமல் இருந்திருந்தால் அது தான் அதிசயம்; சரிதானே மிஸ்.."

"மாயா" என்று தன்னையறியாமல் சொல்லி விட்டு உடனே நாக்கை கடித்துக் கொண்டாள் அவள். அவன் கேட்டதும், அதற்கு மரியாதை கொடுத்து அவசரமாகப் பெயரைச் சொல்லி விட்டேனே என்று தோன்றியபோதும் அவளுக்கு உள்ளூர சிரிப்புதான் வந்தது.

ஆனால் அவனோ, "மாயா! மா..யா. ஆகா! என்ன அழகான பெயர். ஆனால் ஒன்று கண்ணைத் தட்டி விழிக்கத்தான் மிகவும் பயமாக இருக்கிறது" என்றான் அஞ்சியவன் போல.

"ஏனோ?" என்றாள் அவள் புன்னகையோடு.

"கண் சிமிட்டுமுன் நீங்கள் மாயமாய் மறைந்து போய் விட்டால்! பெயரே மா..யா.. அல்லவா?" என்று அவளைப் புன்னகைக்கச் செய்துவிட்டு, "ஆகா, கண் என்றதும்தான் திரும்பவும் ஞாபகம் வருகிறது. இங்கே அடித்த புழுதிப் புயல் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமில்லையா? இந்தப் புயல் தூசி கண்ணில் பட்டால் உடனே எடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கண்ணுக்கே ஆபத்து மாயா. சாரி. மிஸ் மாயா.. வந்து 'மிஸ்' தானே மாயா?" என்று சந்தேகம் கேட்டான்.

"உம்" என்று மாயா ஒப்புதலாய்த் தலையசைக்கவும், "அப்பாடி! பிழைத்தேன்!" என்று பெரிதாக ஆசுவாசப் பெரு மூச்சு விட்டான்.

PK (9).JPG

'ஏன் அப்படி?' என்று கேட்க வாயெடுத்து விட்டு, அவளுக்கு உச்சி குளிர வைத்து இனிமையாகவே பேச்சை இன்னமும் வளர்த்த அவன் கையாளும் உத்தி இது என்று கண்டு, சரியான சமயத்தில் வாயை மூடிக் கொண்டாள் அவள்.

அவனிடம் பேச அவளுக்குப் பிடிக்கவில்லை என்று இல்லை. மாறாக, அறைக்குள்ளே புழுதிப் புயல் அடித்ததாகக் கூறி, உன் பொய்யை நான் நம்பவில்லை என்று அவன் சொல்லாமல் சொன்ன விதத்தை மாயா மிகவும் ரசித்தாள். தொடர்ந்து, அவனது இதமான கேலியும், பாவனையும் கூட அவனோடு பேசிக்கொண்டிருக்கும் ஆவலையே தூண்டின.

ஆனால் அம்மா, அப்பா கண்ணில் பட்டுவிட்டால்? வேறு யாரேனும் பார்த்து, சும்மா பேச்சு வாக்கில் அவர்களிடம் சொல்லிவிட்டால் கூடப் போதுமே! இப்போது இருக்கிற நரகம் போதாது என்று இனி, எரிகிற நெருப்பிலும் எண்ணெய்க் கொப்பரையிலும் தூக்கிப் போட்டு விடுவார்கள்.

முன்னெப்போதையும் விட, பதினாறு வயது பிழையைச் செய்ததற்காக அப்போது மிக அதிமாக வருத்தப்பட்டாள் மாயா.

அதை மட்டும் அவள் அன்று செய்யாமல் இருந்திருந்தால், அவளுடைய பெற்றோர் அப்படிக் கண்டிப்பும் கடுமையுமாக மாறியிருக்கமாட்டார்கள். எவ்வளவு செல்லமாக வளர்த்தார்கள்! கண்ணு, கண்ணம்மா என்பது தவிரப் பெயர் சொல்லி அழைத்ததுகூடக் கிடையாதே?



அப்போதெல்லாம் மாயாவின் விருப்பத்துக்கு ஒரு தடை உண்டா? அந்தக் குடும்பத்திலேயே அதிகச் சுதந்திரத்தோடு வளர்ந்தவள் அவள்தான். எங்கே போனாலும் என்ன செய்தாலும் கேள்வி ஏது? அம்மா எப்போதாவது கேட்டால் கூட அப்பா அடக்கி விடுவாரே! 'என் பெண்ணடி! என்ன செய்யலாம், எது கூடாது என்று அவளுக்கே தெரியும்' என்பாரே. அவள் மட்டும் சும்மா இருந்திருந்தால், இன்னும் அதே சுதந்திரத்தோடு வளைய வரலாமே!

ஆனால் அது அவள் செய்துவிட்ட பிறகு, அதைச் செய்யாமல் இருந்திருந்தால் அப்படி இப்படி என்று இல்லாத கற்பனைகளைச் செய்து ஏங்குவதில் பயனில்லை. மாறாக, அன்று செய்தகுற்றத்திற்காக அனுபவித்துக் கொண்டிருக்கும் தண்டனையை அதிகப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதில் கவனத்தைச் செலுத்துவது மேல்.

அதற்கு முதல்படியாக, இப்போது எதிரே நின்று, பார்வையாலும் பேச்சாலும் அவளைப் பெருமைப்படுத்தும் இவனை விட்டு விலகிச் சென்றாக வேண்டும்.

அவளிடம் மாற்றம் உணர்ந்து, "என்னம்மா என்ன விஷயம்!" என்று கனிந்த குரலில் அவன் கேட்கவும் மாயாவுக்கு உள்ளூர இறுக்கம் குறைவது போல இருந்தது. இவனிடம் சொன்னால் இந்த வேதனையும் குறையக் கூடுமோ?

"அது வந்து- நந்தினி, பாபு, வீணா- இன்னும் எல்லோரும் இனி என்னிடம் பேச மாட்டார்களாம்" என்றாள் வருத்தத்துடன்.

PK (10).JPG

"உன்...னிடமா? அத்தனை பேரும் மகா மண்டுகளாக இருக்க வேண்டும். ஆமாம். யார் அவர்கள்."

"நந்தினி என் சித்தப்பா மகள். வீணா..." என்றவள் சட்டென அதிர்ந்தாள். அவள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்.

அவளுடைய சொந்த உறவினர்களைப்பற்றி யாரோ ஓர் அந்நியனிடம்... சேச்சே... சட்டென எழுந்தவள், "நான்...நான் போக வேண்டும். அம்மா தேடுவார்கள்" என்று உரைத்தபடி வேகமாக நடக்கலானாள்.

"ஹலோ...மாயா... என்ன அவசரம்? நான் யாரென்று தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று அவன் கேட்டு முடித்தபோது, மாயா அவன் பார்வையிலிருந்து மறையத் தொடங்கியிருந்தாள்.

பெண் வீட்டார் தங்கியிருந்த அறைகளின் பக்கமாக மாயா திரும்புவதை கண்டுவிட்டு சிறு புன்னகையுடன் திரும்பிச் சென்றான் அந்தப் புதியவன்.

மாலை வரவேற்புக்காக, மகளுக்கு அலங்காரம் செய்து விட்டு, அவளை ஏற இறங்கப் பார்த்த சுசீலாவுக்கு பெருமூச்சு வந்தது. "பார், மாயா, வரவேற்பின்போது அம்மாவோ, அப்பாவோ உன் அருகில் காவலுக்கு நிற்க முடியாது. மாலினி தன்னோடு அவள் கணவன் வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சீர், செனத்திகளை எடுத்து வைக்கப் பெரியம்மா என்னை வரச் சொல்லியிருக்கிறார்கள். முழுக்க உள் அறையில் எனக்கு வேலையிருக்கிறது. அப்பாவுக்கும் கல்யாணத்துக்கு வந்தவர்களை சாப்பிடச் சொல்லி விருந்து



உபசாரம் செய்ய அங்கேயே நிற்க வேண்டியிருக்கிறது. ஒருவரும் இல்லை என்று நீ எங்காவும் சுற்றப் போய் விடாதே சொல்வது புரிகிறதா!"

"சரிம்மா..."

"என்ன சரிம்மாவோ? அத்தோடு உனக்கும் ஒரு வேலை இருக்கிறது. விருந்தினரை வரவேற்பதாக நந்தினி பூத்தட்டையும், சுகிர்தா கல்கண்டையும், வீணா சந்தனக் கிண்ணத்தையும் வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். பன்னீர் தெளிக்க சற்று உயரமாய் நீ நின்றால் நன்றாயிருக்கும் என்று பெரியம்மா சொல்கிறார்கள். மறுக்க முடியாது. அதனால் அவர்களோடு சேர்ந்து நில்லு. ஆனால் கவனம்; அடக்கமாய், அமைதியாய் நிற்க வேண்டுமே தவிர, அசட்டு பிசட்டு என்று யாருடனும் பேசவோ சிரிக்கவோ கூடாது. சும்மா லேசான புன்னகையோடு வருகிறவர்களுக்கு கொஞ்சமாய் பன்னீர் தெளிக்க வேண்டும்..."

"இனி அவளாக வந்தால்கூடச் சேர்த்துக் கொள்ளக் கூடாது" என்று பாபுவின் குரலும், அதற்கு மற்றவர்களின் ஆமோதிப்பும் நினைவு வர, உள்ளூரக் கலக்கத்துடன், "வேண்டாம்மா, நான் உங்களோடயே இருக்கிறேனே!" என்றாள் மாயா கெஞ்சுதலாக.

சட்டென சுசீலாவின் முகம் கடுத்தது. "ஆமாம். பச்சைக் குழந்தை மாதிரி இதில் ஒன்றும் குறைச்சலே கிடையாது. இதை நம்பி ஒரு தரம் பட்டது போதாதா? பேசாமல் சொன்னதைச் செய், தனியாகப் பெண்களாக நிற்க வேண்டாம் என்று துணைக்கு பாபு, சரவணன் எல்லோரும் கூட

அங்கேதான் அக்கம் பக்கமாய் நிற்பார்கள். அதனால் பயம் ஒன்றும் இல்லை. நீ மட்டும் யாரிடமும் கெக்கே பிக்கே என்று பேசிக் கெட்ட பெயர் தேடிக்கொண்டு விடாதே. அப்பாவையும் அவ்வப்போது பார்த்துக் கொள்ளச் சொல்லுகிறேன்'' என்று முடித்தாள்.

உள்ளூரக் கலக்கத்துடன் தன்னுடைய பெரியப்பா, சித்தப்பா அத்தை மக்களின் அருகே போய் நின்றாள் மாயா.

கொஞ்சநேரம், அவள் ஒருத்தி அங்கே இல்லாதது போலவே பாவித்து, தங்களுக்குள்ளேயே பேசிச் சிரித்தனர் மற்றவர்கள்.

முகம் வாடி நிற்பதும், விருந்தினர் வரும்போது உதடுகளில் புன்னகை பூசிப் பன்னீர் தெளிப்பதுமாக, உடனேயே மீண்டும் வாடுவதுமாக அவள் நின்றாள்.

அவ்வப்போது கடைக்கண் பார்வைகள் அவர்கள் மீது பாய்ந்த போதும் யாரும் அவளிடம் பேச்சுக் கொடுப்பதாக இல்லை.

ஆனால், இந்த நிலை விரைவிலேயே மாறி விட்டது.

மாயாவுடைய தாயார் வழிப் பெரியம்மாவும், இந்த விழாவுக்கு வந்தாள். வந்தவள், கையில் பன்னீர்ச் செம்புடன் மாயா நிற்பதைக் கண்டதும், ''அடேயப்பா அதிசயமாய் உன் அம்மா தன் மடியை விட்டு உன்னை இறக்கி விட்டுவிட்டாள் போல! எங்கள் ரஞ்சனி கல்யாணத்துக்கு வரவேற்பில் உன்னை இப்படி நிறுத்த எவ்வளவு கெஞ்சினேன்? விட்டாளா? 'ஷோ ரூம்' பொம்மை போல அலங்காரம் பண்ணி வாசலில் நிறுத்திவைப்பது அவளுக்குப் பிடிக்காது



அது இது என்றாளே! இப்போது என்ன, உருவி விட்ட கோலமாகவா நிற்கிறாய்? நெத்திச் சுட்டி, ஒட்டியாணம் எல்லாம் தங்கம்தானா? பூட்டி விட்டிருக்கிறாளே? இதை யெல்லாம் மாட்டிக் கொண்டு இங்கே நிற்பது மட்டும் 'ஷோ ரூம்' பொம்மை மாதிரி இராதாக்கும்?'' என்று பொருமித் தீர்த்தாள்.

தங்கை புகுந்த இடம் சற்று உயர்மட்டம் என்பதில் அந்த அம்மாளுக்கு எப்போதுமே பொறாமை உண்டு. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஏதாவது சொல்லி மட்டம் தட்டுவாள். அதையே இன்றும் செய்தாள்.

ஆனால் ஏற்கனவே இளகிக் கொண்டிருந்த சிறுசுகள் இப்போது உருகி விட்டன.

பதில் சொல்ல மாட்டாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்ற மாயாவின் அருகே வந்து நின்று கொண்டு ''தாத்தா முழுப் பெயர் தங்க பாண்டியன் தானே?'' என்று அவளிடம் ரகசியமாய்க் கேட்டுவிட்டு, ''இது எங்கள் வீட்டுக் கல்யாணம், ஆன்ட்டி, தங்கபாண்டியன் வீட்டுத்திருமணம். இந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் வரவேற்கிறோம். உங்கள் வீட்டில் வந்து, தங்க பாண்டியனுடைய பேத்தி மற்றவர்களை எப்படி வரவேற்க முடியும்? அங்கே இவளே விருந்தாளி அல்லவா?'' என்று தன் சித்தப்பா மகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினான் பாபு.

''ஆமாம் பெரிய வீடுதான் போடா போ'' என்று முகவாயைத் தோளில் இடித்துக்கொண்டு முன்னே நகர்ந்தாள் அந்த அம்மாள்.

PK (13).JPG

அதன் பிறகு எல்லாம் சரியாகி விட்டது.

"எல்லாம் பெரியம்மா செய்கிற வேலைதானா? ஆனால் பெரியம்மாவையும் குற்றம் சொல்வதற்கில்லை. நீ இப்படி அழகாக இருப்பதால் யார் கண்ணாவது பட்டுவிடும் என்று பயந்திருப்பார்கள். எங்கள் அம்மா எனக்கே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுற்றிப்போடுவார்கள், தெரியுமா?" என்றாள் நந்தினி.

"கண்ணாவது மண்ணாவது? எல்லாம் சுத்த நான் சென்ஸ்!" என்றான் சரவணன்.

"கல்லெறி பட்டாலும் கண்ணெறி படக்கூடாது; பலர் கண்பட்டால் பாம்பும் சாகும் என்று நிறையப் பழமொழி இருக்கிறது தெரியுமா? அம்மா நிறையச் சொல்லுவார்கள். அந்தக் காலத்து பழமொழி எல்லாம் சரியாகத்தான் இருக்குமாம்" என்றாள் சுகிர்தா.

அப்புறமாய்க் கண்ணேறுபற்றி அங்கே ஒரு பட்டிமன்றம் நடந்தது. அப்புறம் திருமணச் சடங்குகள் பற்றி, அப்புறம் நினைவில் வந்த எல்லாவற்றையும் அலசினார்கள்.

யாராவது வருகிற நேரம் கருமமே கண்ணாகக் கல்கண்டு, பூ, சந்தனம் நீட்டிப் பன்னீர் தெளித்து அனுப்பி விடுவார்கள். ஆள் இல்லாத நேரம் கலகலப்பாய் பேச்சு தொடரும். இடையிடையே ஒருவரை ஒருவர் கிண்டலடிப்பது, காலை வாருவது, மாட்டிக் கொண்டு அசடு வழிகிறவர்களைப் பார்த்து நகைப்பது.

வெகு நாளைக்குப் பிறகு மாயாவுக்கு ஓர் இரண்டு மணி நேரம் உற்சாகமாய்க் கழிந்தது.



விருந்தாளிகளின் வரவு குறையத் தொடங்கிவிட்ட நேரம்.

வரவேற்புப் பகுதியில் பேச்சு வெகு சுவாரசியமாகத் திரைப்படங்களைப் பற்றிச் சுழன்றது.

கதைக்கரு, ஸ்டண்ட் வேலை தொழில் நுட்ப வேலைகள் எல்லாம் பற்றி விலாவாரியாகப் பேசி அபிப்பிராயம் கலந்து கொண்டார்கள்.

சுற்றி ஒரு கூட்டம் நின்று அரைகுறைத் துணியில் ஆட கதாநாயகனும் நாயகியும் நடுவில் நின்று கட்டிப் பிடித்துக் காதல் செய்வது பற்றிய பேச்சு வந்தது. "சுத்தப் பைத்தியக் காரத்தனம்!" என்று எல்லோருமே ஒரு மனதாகத் தீர்ப்பு வழங்கினார்கள்.

அன்று அன்னையிடம் திட்டு வாங்கி வைத்த திரைப் படம் நினைவு வர, "யாருக்கும் பிடிக்காத இந்த மாதிரிக் காட்சிகளைப் படங்களில் ஏன் தான் சேர்க்கிறார்களோ?" என்றபடியே, அப்போதுதான் வந்து கொண்டிருந்த ஒருவருக்கு உரிய வரிசைப்படி சந்தனம், பூ, கல்கண்டு அளிக்கப்பட தொடர்ந்து மாயாவின் பன்னீர்ச் சொம்பை உயர்த்தினாள்.

"பார்க்கச் சகிக்காத கதாநாயகி, நாயகனை விட்டு மாற்றாக அந்தக் கூட்டத்தையாவது பார்க்கட்டுமே என்று ரசிகர்கள் மேல் ஓர் அனுதாபம்தான் வேறு எதற்கு?" என்று வேற்றுக் குரல் ஒன்று இடையிட்டது.

திகைப்புற்று, நிமிர்ந்து எதிரே வந்துவிட்டவனைப் பார்த்தாள் மாயா.

PK (14).JPG

அவனேதான்! கல்யாண ஹாலுக்குள் புழுதிப் புயல் என்று அவளது அன்று காலையில் அவளைப் பொய்யன் என்று சொல்லாமல் சொன்ன புதியவன்.

கையில் தூக்கிய பன்னீர்ச் செம்பை மறந்து அவள் பேந்த விழிக்க, "ஹாய்! மாயா!" என்று தன் வெண்பல் வரிசை தெரியப் புன்னகை செய்தான் அவன். என்ன எல்லாம் நன்றாகி விட்டதா?" என்று தணிந்த குரலில் விசாரித்தான்.

என்ன சொல்வது என்று புரியாமல் ஹா... ய்" என்று தடுமாறினாள் மாயா.

நல்ல வேளையாக, அவள்ளை மேலும் திணற விடாமல், பெரியப்பா வேகமாக வந்து சேர்ந்தார். "ஹல்லோ வாருங்கள், வாருங்கள் மிஸ்டர் சத்யாகர். எப்படியோ, மீட்டிங்கை முடித்த கையோடு இங்கே வந்து, நீங்கள் இந்த வரவேற்பிலும் கலந்து கொண்டதைப்பற்றி, எனக்கு மிகவும் மகிழ்ச்சி, வாருங்கள் சாப்பிடலாம்" என்று அவனை வரவேற்று அழைத்துச் சென்றார்.

"வா... வ்!" என்றாள் வீணா. "என்ன உயரம்! என்ன ஸ்டைல்! என்ன கம்பீரம்! இத்தனைக்கும் மேல் நன்றாகப் பழக வேறு செய்வார்போல! பெரியப்பாவே நேரில் வந்து அழைத்துப் போவது என்றால் பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். யார் மாயா, இது?" என்று விசாரித்தாள்.

யாரென்று சொல்லுவாள்? உண்மையைச் சொன்னால் இவர்கள் நம்பமாட்டார்கள். அவன்தான் ரொம்பப் பழகியவன் போல் 'ஹாய் மாயா' என்று விட்டான். தணிந்த குரலில் விசாரிப்பு வேறு! இனி இவர்களிடம், இவனை இன்று



காலையில்தான் சந்தித்தேன். பெரியப்பா அழைக்கும் வரை அவர் பெயர்கூடத் தெரியாது என்றால் யாரும் அவளை நம்பப்போவதில்லை. மாறாக, அப்போதுதான் இயல்பாகத் தொடங்கியிருக்கும் உறவு மீண்டும் அறுந்து விடும் என்பதை உணர்ந்து வேகமாக யோசித்து, "ஏதோ குடும்பத்தில் தொழில் துறை தொடர்பு வீணா. இரண்டு மூன்று முறை பார்த்திருக்கிறேன். சிரிப்பாலும் பேச்சாலும் எல்லோரையும் வசியம் பண்ணிவிடுவாராம்" என்று சொன்னது யார், என்ன என்று இல்லாமலே பொதுவாக அளந்து வைத்தாள் மாயா.

ஏமாற்று வேலைதான். ஆனால் அந்த நேரத்தில், ஒத்த வயது உறவினரின் பிரியம் மிகவும் முக்கியம் போலத் தோன்றவே, ஏதோ தந்தை மூலமாய் அறிந்தாற்போலப் பெற்றவர் பெயரையும் குறிப்பிடாமலே சமாளித்து வைத்தாள்.

அதை மேலே கிண்டிக் கிளறாமல் அப்படியே ஏற்று "பார்த்தாலே அப்படித்தான் தோன்றுகிறது என்ன இலகுவாக நம் பேச்சில் கலந்து கொண்டார் பார்" என்றான் பாபு.

"ஆமாம்... ஆமாம் அவர் சிரிப்புகூட ரொம்பக் கவர்ச்சி" என்றாள் சுகிர்தா.

"நிஜமான பெரிய மனிதராய்த் தெரிகிறது" என்றான் சரவணன்.

எல்லோருமாய் எல்லாவற்றுக்கும் 'ஆமாம்' போட்டுக் கொண்டிருக்கையில், நல்லவேளையாய் ஒரு பெரிய, குண்டுக் குடும்பம், இரண்டு பெரியவர்களும், ஆறு பிள்ளைகளுமாய் வந்து சேர, அவர்களுக்குச் செய்ய வேண்டிய உபகாரங்களைச் செய்து அனுப்பிவிட்டு

PK (15).JPG

அவர்களைப் பற்றிய வேடிக்கை வர்ணனைகளிலும் சிரிப்பிலுமாகப் பேச்சு திசை திரும்பியது.

சத்யாகரைப் பற்றிய பேச்சும் அத்தோடு அடங்கிப் போயிற்று.

"இனி வரவேற்பில் நிற்கத் தேவையில்லை. உள்ளே வந்து கச்சேரி கேளுங்கள்" என்று சித்தப்பா அழைத்தபோது மாயாவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

"நாமும் சாப்பிட போகலாம்" என்று ஒரு செட் அழைத்தபோது. 'பசியில்லை' என்று கூறித் தவிர்த்தாள் மாயா. அங்கே சாப்பாட்டு அறையில் பந்தி விசாரணை செய்து கொண்டு இருப்பவர் அவளுடைய தகப்பனார். அவர் முன்னிலையில், அவள் சாப்பிடுவதற்குத் தவிர, மற்றபடி வாயைத் திறக்க முடியுமா?

அதே போலவே, "உள்ளே மாலிக்காவோடு என்னென்ன 'கப்பம்' கட்டப்போகிறார்கள் என்று பார்ப்போமா?" என்று சுகிர்தா, வீணா, நந்தினியுடனும் உள்ளே செல்வதைத் தவிர்த்துவிட்டு, அங்கேயே ஓர் ஓரமாய் அமர்ந்து பாட்டுக் கேட்பதாக பாவனை செய்யலானாள்.

பெற்ற தாயையும் தந்தையும் தவிர்ப்பது எவ்வளவு துரதிஷ்டம்?

ஆனால் அவளது தப்புக்கு எவ்வளவுதான் தண்டனை அனுபவிப்பது?

தன்னையறியாமல் பெருமூச்சு விட்டபோது, "இந்த பாட்டை ரசிப்பது என்ன, அவ்வளவு கஷ்டமாகவா



இருக்கிறது?" என்று கேள்வியுடன் அருகில் யாரோ அமர்ந்தார்கள்.

மெல்ல விழிகளைத் திரும்பி அவனைப் பார்க்கும் முன்பாகவே மாயாவுக்கு அது யார் என்று தெரிந்து போயிற்று.

சத்யாகர்!

இவன் ஏன் இங்கே வந்து உட்காருகிறான்? அம்மா அப்பா கண்ணில் படுமுன், மனம் நோகாமல் இவனை விரட்டியாக வேண்டுமே?

"இதைவிட அந்தப் பக்கம்-அதோ அந்தப்பக்கம் பாட்டு நன்றாக கேட்குமே. போய் கேட்கிறீர்களா?" என்று இனிய குரலில் வினவினாள் அவள்.

குறுஞ்சிரிப்புடன் "இப்படியெல்லாம் எளிதாக என்னை விரட்டிவிட முடியாதம்மா" என்று தலையை மறுப்பாக ஆட்டினான் சத்யாகர்.



3

**வே**சான வெட்கத்தில் மாயாவின் கன்னங்கள் செம்மையுற்றன. இவன், இப்படி அவளைக் கண்டு கொண்டானே!

ஆயினும், சத்யாகரின் ஊகம் தவறு என்று காட்டி, தன் மனதை இன்னமும் மறைத்துக் கொள்ளும் முயற்சியில், "விரட்டுவானேன்? நீங்கள் அப்படி என்ன தப்புதண்டா செய்து விட்டீர்கள்?" என்று மிடுக்காகக் கேட்டாள் மாயா.

PK (16).JPG

"அதானே!" என்று அவனும் சேர்ந்து அதிசயப்பட்டான். "யோசித்து, யோசித்துப் பார்த்தும் தப்பு ஏதும் செய்ததாகவே தெரியவில்லை. அப்படியிருக்க, இந்த அழகான பெண் நம்மை ஏன் விரட்டவேண்டும் என்பதுதான் என் கேள்வியும்!" என்று கூறிக் கண்ணால் சிரித்தான் சத்யாகர்.

"அய்யா! நான்தான் விரட்டவில்லை என்கிறேனே!" என்றாள் அவள் அலுப்புடன்.

"அப்படியானால் 'சரி, நாம் இருவரும் நிம்மதியாகப் பேசிக்கொண்டு இருக்கலாம்" என்று அவன் திருப்தியுடன், அவள் புறம் நன்றாகத் திரும்பி இலகுவாக அமர்ந்தான்.

எதிலேயோ மாட்டிக் கொள்வது போன்ற உணர்வு மாயாவுக்கு. உள்ளூரப் படபடப்புடன், "பாருங்கள் சார், நீங்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. உங்களோடு நான் என்ன பேசுவது?" என்று எழுந்தாள் மாயா.

ஆனால் அதிலும் ஒரு சங்கடம். வரிசையின் உட்புறமாய்ச் செல்லுவது என்றால் அங்கே நிறையப் பேர் அமர்ந்திருந்தார்கள். இடிக்காமல் செல்லுவது கடினம். வெளிப்புறமாக என்றால், அங்கே சத்யாகர் உட்கார்ந்திருந்தான். அவள் எழுவதைப் பார்த்ததும் அசைந்தானில்லை.

"இதற்குத்தான், 'பைத்தியம் தெளிந்தால் கல்யாணம்; கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்' என்கிற உதாரணம் போலும். என்னோடு பேசாமல் எப்படி என்னைத் தெரிந்து கொள்ள முடியும்? ஆனால், நீயானால் தெரியாததாலேயே என்னோடு பேசமாட்டேன் என்கிறாயே! நீயே சொல்லேன், இதற்கு என்னதான் தீர்வு?"



ஒரு பொறுமையிழந்த மூச்சுடன் அவள் "இதோ பாருங்கள்.." என்று தொடங்கியபோது சத்யாகரே தொடர்ந்து பேசினான்.

"ஆனால் என்னை ஒரேயடியாக அன்னியன் என்று ஒதுக்கிவிடவும் முடியாது. உன் பெரியப்பாவே வாயில் வரை வந்து வரவேற்று அழைத்துச் செல்லும் அளவுக்கு அவருக்குப் பழக்கமானவன் நான். மொத்தக் குடும்பத்துடைய தலைவரே தெரிந்தவர் என்றால் அது போதாதா?"

நின்று கொண்டு பேசுவது பிறர் கவனத்தைக் கவர்வது போலத் தோன்றவும், சட்டென அமர்ந்து கொண்டாள் மாயா. "இதோ பாருங்கள், பெரியப்பாவின் தொழில்முறை நண்பர்களோடெல்லாம் நான் பேசியாக வேண்டிய கட்டாயம் இல்லை அத்தோடு நாம் இருவரும் பேச என்ன இருக்கிறது?" என்று கேட்டாள்.

"எத்தனையோ! உலகத்தில் இரண்டு பேர் பேச விஷயமா இல்லை? உதாரணமாக, இந்தப் பாடகி தமிழச்சி இல்லை அதனால், 'வாழ்க, வெல்க' போன்ற வார்த்தைகளையெல்லாம் 'வாழ்காவெல்வா' என்று நெடிலாக முடிக்கிறாள். உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று தொடங்கினான் சத்யாகர்.

சத்யாகர் வழிவிடாமல் அவனைத் தாண்டி செல்ல இயலாது...முடியாது என்பதால் வேறு வழியின்றித்தான் முதலில் மாயா, சத்யாகரோடு பேசத் தொடங்கியது.

ஆனால் விரைவிலேயே பேச்சு சுவாரசியமாக ஓடத் தொடங்கியது.

சத்யாகருக்கு நிறைய விஷயங்கள் தெரிந்திருந்தன. பல நாட்டு பழக்க வழக்கங்கள், உணவு முறை பற்றிச் சுவைபடச் சொன்னான். "பொதுவாக அந்தந்த நாட்டு உணவை. அங்கங்கே சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு நல்லது மாயா. ஆஃப்ரிக்க நாடுகளுக்குப்போனால் முக்கிய உணவாய் குப் இருக்கும். அங்கே வியர்க்கும் வியர்வைக்கு. உடம்புக்கு நிறைய நீர் வேண்டுமல்லவா? அதே நார்வே, ஸ்வீடன் போனால் உணவில் உப்பு குறைவாக இருக்கும். அங்கே வியர்வை இராது என்பதால் உடம்பில் சேரும் உப்பு செலவாவது மிகவும் குறைவு. பொதுவாக, வழி வழி வந்த உணவு வகைகள். அந்தந்த இடத்துத் தட்பவெப்பங்களுக்குப் பொருந்தும்படி இருக்கும் என்பதோடு, 'சித்திரமும் கைப்பழக்கம்' ரீதியில் அதிகச் சுவைபடத் தயாரிக்கவும் செய்வார்கள் என்று அந்தந்த இடத்து உணவைத்தான் நான் சாப்பிடுவது" என்றான், சத்யாகர்.

"சைனாவில் பாம்பு சாப்பிடுவார்களாமே!" என்று கண்களில் குறும்பு மிளிரக் கேட்டாள் மாயா. "பல்லி கூட–"

லேசாக முறுவலித்து, "பாம்புக்கறி மிருதுவாய் சுவையாக, இருக்கும் தெரியுமா?" என்றான் அவன் பதிலுக்கு

"சாப்பிட்டிருக்கிறீர்களா? அய்யோ!"

"ஒரே ஒருதரம் ருசி பார்த்திருக்கிறேன். அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. அங்கெல்லாம் பொதுவாக 'நூடுல்ஸ்' தான் விதம் விதமாய்க் கிடைக்கும். ருசியாகவும் இருக்கும்."

சற்று யோசித்து, "நல்ல ஐடியாதான். உங்களுடையது" என்றாள் மாயா.



"நாளைக்கு என்னுடைய 'சிறந்த பாதி'யாக வரப் போகிறவளும் இப்படியே நினைத்தால் நன்றாக இருக்கும்" என்றான் அவன் மாயாவின் முகத்தில் பார்வையைப் பதித்து.

"அதற்கென்ன? காரணம் சொன்னால் ஒத்துக் கொண்டு விடப்போகிறாள்" என்றாள் அவள் சர்வசாதாரணமாக.

"என் வருங்கால மனைவி பற்றி யார், என்னவென்று உனக்குத் தெரிய வேண்டாமா மாயா?" என்று வினவினான் சத்யாகர்.

வார்த்தைகள் சாதாரணம் போலத் தோன்றினாலும், குரலிலோ, சொன்ன முறையிலோ ஏதோ ஒரு வேறுபாட்டை உணர்ந்தாள் மாயா. குற்றம் சாட்டுவது போல என்றால் அது கடுமையான விமர்சனம். ஏதோ குறைபட்டாற் போல. சிறு ஏமாற்றம் போலத் தோன்றவும். மேடையிலிருந்து பார்வையைத் திருப்பி அருகில் இருந்தவனை நோக்கினாள்.

அவன் முகத்தில் அதே முறுவல் தவழவும், தன் குழப்பத்தை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி, "உங்கள் மனைவி பற்றி எனக்குத் தெரிந்து ஆவதென்ன, சார்? அவர்களை நீங்கதான் நன்றாக ஆராய்ந்து வைத்திருக்க வேண்டும்" என்று உரைத்தாள்.

சிறு அமைதியின் பின், "அதே முயற்சிதான், எனக்கு" என்றான் அவன் பூடகமாக.

"ஆமாம் ரொம்பவும் கவனத்துடன் செய்தாக வேண்டிய முயற்சி. இல்லாவிட்டால், உங்கள் மனைவி சைனாவில் போய் சாம்பாரும், ஆஃப்ரிக்காவில் 'நூடுல்சும்' கேட்டு உங்களை

PK (18).JPG

ஆட்டிப் படைத்து விடப் போகிறாள்" என்று கேலியாக மிரட்டியவள், திடீரென்று ஒன்று தோன்றவும், "அப்படியானால் நிறைய நாள் நீங்கள் வெளி நாட்டிலேயே சுற்றுவீர்களா, சார், எவ்வளவு லக்கி, செக்குமாடு மாதிரி ஒரே இடத்திலேயே உழன்று, பார்த்த முகங்களையே பார்த்துக் கொண்டு இராமல் ஜாலியாகத் தப்பித்துக் கொண்டு போய் விடலாம்." என்றாள் கண்கள் மின்ன.

"உனக்கு வெளிநாடு போவதில் ஆசையா மாயா."

"யாயா!" என்று சிரித்தாள் அவள்; "ஆசையா மாயா என்று எதுகையோடு பேசுகிறீர்களே, நானும் அதனால் யாயா சொன்னேன்; மற்றபடி வெளிநாடு தான் போயாக வேண்டும் என்று இல்லை. சும்மா, இங்கேயே வெளியூர் எங்காவது போனால்கூட எனக்கு மகிழ்ச்சிதான். யாரும் தெரிந்தவர்களே இல்லாத இடத்தில், இஷ்டம்போல் சந்தோ...ஷமாய் இருக்க வேண்டும்" என்றாள் அவள்.

"லீவு நாட்களில் அப்படிப் போவதுண்டா?"

"எங்கே நாலு சுவர்களில் ஒன்றை விட்டால் அடுத்த சுவரைப் பார்த்துக் கொண்டு வீட்டிலேயே தான் இருப்போம்..." என்ற போதே மாயாவுக்கு நெஞ்சக்குள் அடைத்தது.

சிறு வயதில், ஆண்டுதோறும், கோடை விடுமுறைக்குத் தாத்தா வீட்டுக்குப் போவதும், கடலில் துளைவதும், மாலையில் கோயிலைச் சுற்றுவதும் பட்டாள கடற்கரை மணலில் எல்லோரும் சேர்ந்து விளையாடுவதும்... இன்று ஒன்றுமே இல்லாது போயிற்றே?



இந்த நிலைக்கு அவன் தன்னையேதான் நொந்தாக வேண்டும். ஆனால் பாவம், அவளால் அவளுடைய பெற்றோருக்கும் இந்த விடுமுறைக்களிப்பு இல்லாது போயிற்று.

ஆனால் அவர்களும் ரொம்பவும் அளவு மீறித்தான் போகிறார்கள். முடிந்தால் பீரோவுக்குள் வைத்துகூடப் பூட்டி விடுவார்கள் போலல்லவா நடந்து கொள்கிறார்கள்.

"மாயா, வீட்டு ஆட்களையும் சாப்பிட்டுவிடும்படி சாரங்கன் மாமா அழைத்து வரச் சொன்னார். நீ சாப்பிட வில்லையா? போ. போய்ச் சாப்பிடு. நான் போய், அத்தை, சித்தி என்று அங்கே எல்லோரையும் அழைத்து வருகிறேன்" என்றபடி சரவணன் வரவே சத்யாகர் எழுந்துவழிவிட மாயா சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தாள்.

அங்கே ஒரு பந்தி முடிந்து மேசைகளைச் சுத்தம் செய்து கொண்டு இருந்தார்கள்.

மகளைத் தனியே அழைத்து, சாரங்கன் கண்டித்தார். "என்னம்மா, உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் புரியாதா? யாரோ ஓர் அன்னியரோடு இவ்வளவு நேரமா பேசுவாய். நீயாகக் கிளம்புவாய், கிளம்புவாய் என்று இங்கிருந்து பார்த்துக் கொண்டே இருக்கிறேன். இதுவே, அம்மா பார்த்தால் பத்து நாள் கத்த மாட்டாளா? கூடக் கொஞ்சம் புத்தியுடனேயே நடந்து கொள்ளேன்? சரி...சரி... அதற்குள் அழுவதற்கு ரெடியாகாதே. நான் அம்மாவிடம் ஒன்றும் சொல்லப்போவது இல்லை. நீயும் காட்டிக் கொள்ள வேண்டாம். இப்போது உள்ளே போய், நம் வீட்டுப் பெண்களில் சாப்பிடாதவர்களை

PK (19).JPG

எல்லாம் தேடி அழைத்து வா. இங்கே பந்தி வேலை முடிய வேண்டும்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

மாலினியின் திருமணம் முடிந்து ஒரு மாத காலம் பழைய வழக்கம் போலவே சென்றது.

ஒரே ஒரு வேறுபாடாக, அவளுடைய ஒன்று விட்ட சகோதரன், சகோதரிகள் அவ்வப்போது மாயாவோடு டெலிபோனில் பேசினார்கள்.

ஆனால் அதுவும் கூட, அவர்கள் சினிமா, பிக்னிக் என்று அழைத்தபோது பழைய வழக்கம் போலவே மாயா தட்டிக் கழிக்கவும் மெல்லக் குறையலாயிற்று.

இந்தக் காலக்கட்டத்தில், ஒருநாள் சாரங்கன் வழக்கத்துக்குச் சற்று முன்னதாகவே மிகுந்த பரபரப்புடன் வீடு திரும்பினார்.

உள்ளே வந்ததும் வராததுமாக, ''சுசீலா, சுசீலா'' உரக்க மனைவியை அழைத்துப் பேசினார்.

அன்று மாலையில் கல்லூரி முடிந்து வந்ததிலிருந்தே வீட்டில் ஏதோ வித்தியாசமாக மாயா உணர்ந்தாள்.

முக்கியமான வித்தியாசம் தந்தை வீட்டிலிருந்தத் அடுத்து பெற்றோர் இருவரின் பார்வை.

மலர்ச்சியும் மகிழ்ச்சியுமாக அவர்கள் அவளை நோக்குவது அடியோடு மறந்துவிட்ட ஒன்று. இன்னும் அவர்கள் பார்வையில் அந்த மாதிரி மாற்றம் ஏதும் வந்து விடவில்லை. எனினும் ஒரு வித்தியாசத்துடன் அவர்கள்



இருவரும் விழிகளால் அவளைத் தொடர்வது நன்றாகவே தெரிந்தது.

தெரியாமல் என்ன தப்பு செய்து விட்டோமா? எதற்குத் திட்டு விழப் போகிறதோ என்று உள்ளூரக் கலக்கத்துடன் காத்திருந்து பார்த்தவள், கடைசியாகப் பொறுக்க மாட்டாமல், ''என்னம்மா? என்ன விஷயம்? நான் என்ன தப்பு.. புதிதாக என்ன தப்பு செய்திருக்கிறேன்? சொல்லுங்கள்'' என்று கேட்டு விட்டாள்.

மகளின் பார்வைக்கு மட்டுமாகத் தந்தை லேசாகத் தலையசைக்க, ''தப்பு ஒன்றும் செய்யவில்லை'' என்றாள் தாய்.

''பின்னே ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''என்ன செய்வது? ஒன்று சொன்னால் நீ எப்படி எடுத்துக் கொள்வாயோ என்று புரியாத பாவம் தான்!'' என்றாள் சுசீலா அலுப்புடன்.

''நான் எப்படி என்ன..'' என்று தொடங்கியமாயா, உடனே குரலைத் தணித்து, ''இப்போதெல்லாம் நீங்கள் சொல்வது எதையும் நான் தட்டுவது இல்லையம்மா'' என்று பணிந்து போனாள்.

மகளை நேராகப் பார்த்து, ''அது நிச்சயம் தானா?'' என்று கேட்டாள் அன்னை.

''எ..து?'' என்றாள் அவள் குழப்பமுற்று.

''அதுதான்..என் பேச்சைத் தட்டாதது? அது உறுதிதானா என்று கேட்கிறேன்.''

PK (20).JPG

"கட்டாயமாய்."

கணவனை ஒருதரம் பார்த்துவிட்டு, மீண்டும் மகளிடம் திரும்பினாள் சுசீலா. "நீ சொல்வது மெய்யென்றால் முதலில் நாளைக்குக் கல்லூரிக்கு லீவு போடு."

நாளைக்கு ஒரு 'பிராக்டிகல்' என்று தொடங்கிய மாயா உடனே மாறி, "சரி" என்று கீழ்ப்படிந்தாள். "ஆனால் ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

"சொல்கிறேன். நாளைக்கு மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள்" என்று தெளிவாக அறிவித்தாள் சுசீலா.

ஒரு கணம் பிரமித்து நின்றுவிட்டு உடனே தெளிந்து "ஓ மாலிக்கா கணவர் வீட்டிலிருந்தா? விருந்து செய்ய உதவ வேண்டுமா?" என்று கேட்டாள் மாயா.

மீண்டும் சாரங்கனும் சுசீலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"மாலினியினுடைய கணவர் உன் பெரியப்பா வீட்டுக்குத் தான் மாப்பிள்ளை." என்றாள் சுசீலா ஓர் அழுத்தத்துடன்.

"அம்மா!" அதிர்ந்து போய் அலறி விட்டாள் மாயா. "நான்... நான்...அம்மா, ப்ளீஸ் இதெல்லாம் எனக்கு வேண்டாம்மா!" என்றாள் வேதனையுடன்.

"ஏன்? ஏன் வேண்டாம்? நாளுக்கு நாள் வயது குறைகிறது என்று நினைத்தாயா? இந்தப் பத்தொன்பது வயதில் வேண்டாதது, அன்று பதினாறு வயதில் மட்டும் வேண்டியிருந்ததாக்கும்? ஏதோ ஒரு விடிவு வருகிறது என்று



பார்த்தால் வேண்டாமாம்! எப்படியோ, அன்று விஷத்தை விழுங்கிய அந்த நீலகண்டன் போல அப்பாவும் நானும் உள்ளேயே அடக்கி எரிந்து கொண்டு இருப்பதால் இந்த மட்டும் தேடி வருகிறார்கள். இல்லையென்று சொல்லி ஏன் ஏன் என்று ஊரெல்லாம் நாற வேண்டுமா?" என்று பொரிந்து கொட்டினாள் சுசீலா.

'ஆமாம், ஆ, ஊ என்றால் இதேதான். வாய்ப்புக் கிடைத்தால் தொடங்கி விடுவார்களே' என்று உள்ளூரக் குமுறினாள் மாயா.

"கேட்கிறேனில்லையா பதில் சொல்லித் தொலையேண்டி கல்லூளி மங்கி" கோபத்தில் முகம் சிவக்கக் கத்தத் தொடங்கினாள் தாயார். "ஏண்டி, கல்லூரிக்குப் போய் விட்டு நேராக வீட்டுக்குத்தானே வருகிறாய்? இடைப்பட்ட நேரத்தில் ஒழுங்காகப் பாடத்தைப் பார்க்கிறாயா? இல்லை அங்கேயும் விபரீதம் எதையாவது இழுத்து வைத்திருக்கிறாயா?"

"ஒரு மண்ணாங்கட்டியையும் இழுத்து வைக்கவில்லை" என்று மாயாவும் ஆத்திரத்துடன் வெடித்தாள்.

"உனக்கு கோபம் வேறேயோ? ஊகூம் உன்னை நான் நம்ப மாட்டேன். உன்னையெல்லாம் அறைக்குள்ளேயே பூட்டி வைத்துச் சோறு போடவேண்டும். அப்போதுதான் நிம்மதியாக இருக்க முடியும் கல்லூரிப் படிப்பெல்லாம் இவளுக்கு வேண்டாம் என்றால் நீங்கள் கேட்பது இல்லை. இப்போது என்ன விபரீதம் வரப்போகிறதோ? பேசாமல் இவள் படிப்பை நிறுத்துங்கள். பட்டம் வேண்டுமானால் வீட்டிலேயே இருந்து தனியாகப் படிக்கட்டும்."

PK (21).JPG

மாயா அரண்டு போனாள்.

நாள் முழுவதும் இந்த அம்மாவுடன் வீட்டிலேயே எப்படி இருக்க முடியும்? வாசல் பக்கம் போகாதே. ஜன்னல் பக்கம் நில்லாதே தோட்டத்தில் நடக்காதே என்பதில் மூச்சு முட்டியே மாயா செத்து விடமாட்டாளா?

"சுசீ, நீ போ... நான் மாயாவிடம் சொல்கிறேன்" என்றார் தகப்பனார்.

ஆத்திரத்துடன் மகளை ஒருதரம் முறைத்து விட்டு அங்கிருந்து அகன்றாள் சுசீலா.

ஆனால் தகப்பனார் அதிகம் பேச அவசியம் இருக்க வில்லை. ஏனெனில் ஏற்கனவே மாயா அம்மா அஸ்திரத் திலேயே அடங்கிப் போயிருந்தாள். அப்பா சொன்னதற் கெல்லாம் தலையாட்டி விட்டாள்.

வந்து பாக்கத்தானே போகிறார்கள் வரட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

எத்தனையோ சினிமாக்களில் பார்க்கவில்லையா மாப்பிள்ளைகளிடம் ரகசியமாக, என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டால்-அதைக் கொஞ்சம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டால் தீர்ந்தது.





4

ஆனால் மாயா திட்டமிட்டது போல எதுவும் நடக்கவில்லை. அவள் ஒன்றைத் திட்டமிட்டு என்றுதான் அது நடந்தது? சரித்திரமே கிடையாதே!

ஆனால் ஒன்று முன்பு நடந்தது எப்படியோ இப்போதைய மாயாவின் தீர்மானத்தை அவளே தான் மாற்றிக் கொள்ளும்படி ஆயிற்று.

அதன் முதல் காரணம் மறுநாள் அவளது வீட்டுக்கு வந்தவன் சத்யாகர்!

அவனுடைய தாயார் தகப்பனார் தவிர வேறு கூட்டம் யாருமில்லை. அவனுடைய சகோதரி திருமணமாகி வெளி நாட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். தம்பியின் திருமணத்துக்குத் தான் வரப்போவதாகச் சொல்லியிருக் கிறாளாம்.

எந்தவித பந்தாவும் இல்லாமல், "வாம்மா, நீயும் எங்களோடு உட்கார்" என்று மாயாவையும் அமரச் செய்தார்கள்.

ஆடத் தெரியுமா, பாடத் தெரியுமா, சமைக்கத் தெரியுமா என்பன போன்ற அனாவசியமான கேள்விகளைக் கேட்டு போரடிக்காமல் டென்னிஸ், கிரிக்கெட் போன்ற விளை யாட்டுப் பேச்செடுத்தார்கள், தட்பவெப்பம் பேசினார்கள் மாயாவையும் பேச்சில் இழுத்தார்கள்.

தொழிலைப் பற்றிய பேச்செடுத்த பெரியவர் நடேசன் மகனைத் திரும்பிப் பார்த்தார். "சத்யா நீ ஏதோ மாயாவிடம்

PK (22).JPG

கேட்க வேண்டும் என்றாயே நன்றாக விவரமாகக் கேட்டு விடப்பா." என்றவர் மாயாவுடைய பெரியப்பாவோடு தன் தொழில் துறைப் பழக்கம் பற்றி விவரிக்கத் தொடங்கினார்.

"வீட்டைச் சுற்றிக்காட்டு மாயா" என்றார் சாரங்கன். மாயாவின் அறையைச் சற்று அதிக ஆர்வத்தோடு நோக்கினான் சத்யாகர். "ஆக, இங்கே தான் ஒரு சுவரை விட்டால் அடுத்த சுவரைப் பார்க்கிற வழக்கமாக்கும்" என்றான் கேலிக்குரலில்.

இவனிடம் எப்படிச் சொல்வது என்று மாயாவின் யோசனை ஓடியது. சொல்லித்தான் ஆகவேண்டுமா என்றும் ஏனோ தோன்றியது.

அவள் யோசித்து முடிப்பதற்குள்ளாக சத்யாகர் அவள் அருகே வந்தான்.

அவளது கைகளை மெல்லப்பற்றி "மாயா, என்னை மணந்துகொண்டு என்னோடு வந்து விடுகிறாயா? இந்த அறைக்குள்ளேயே இருந்து ஒரு சுவரை விட்டால் மறுசுவரைப் பார்க்கிற வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். தெரிந்தவர்களே... இல்லாத இடத்தில் இஷ்டம் போல நாமிருவரும் சந்தோஷமாகச் சுற்றலாம். சொல் மாயா என்னை மணந்து கொள்ள உனக்குச் சம்மதம் தானே?" என்று ஆழ்ந்த குரலில் வினவினான்.

அவன் வெறுமனே 'மணம் புரிவாயா' என்று மட்டும் கேட்டிருந்தால் அவள் என்ன சொல்லியிருப்பாளோ? ஆனால், அவன் கூறிய மற்றது மனதில் பலமாகப்பட்டு



விடவே சற்றும் தயங்காமல் சம்மதம் என்று தலையாட்டி விட்டாள் மாயா.

சில வினாடிகள் அசையாமல் நின்று விட்டுத் தொண்டையைச் செருமி "நன்றி மாயா" கம்மிய குரலில் உரைத்தான் சத்யாகர்.

"நன்றி சொல்ல வேண்டியவள் நான்தான்" என்றாள் மாயா சீரியசாக. அவளைப் பொறுத்த வரையில் அதுதான் உண்மையும். இந்தச் சிறை வாசத்திலிருந்து அவளை மீட்கிறவன் அவன் தானே? அதனால் அவனுக்குத் தானே நன்றி செலுத்த வேண்டும்?

திருமணத்தை முடிந்த அளவு விரைவில் முடித்துக் கொள்ளவே பையன் வீட்டார் பிரியப்பட்டனர்.

சாரங்கன் தம்பதிக்கும் மகள் மேல் நம்பிக்கை இல்லாத காரணத்தால் சட்புட்டென்று கல்யாணத்தை நடத்தி முடித்து விடத்தான் விருப்பம்.

ஆனால், "கல்யாண மண்டபம் கிடைக்காவிட்டால், தாஜ் அல்லது சோழாவில் நடத்தலாம். செலவை நான் ஏற்கிறேன்" என்று நடேசன் முன்வரவும், சாரங்கன் கொஞ்சம் பயந்து போனார்.

பிள்ளை வீட்டார் ஏன் இப்படி அவசரப்படுகிறார்கள்?

அண்ணனிடம் ஓடிப்போய் விசாரித்தார்.

"நாலைந்து ஆண்டுகளாகப் பையனின் திருமணத்திற்கு முயற்சி செய்தும், அவன் ஒத்துக் கொள்ளவே இல்லை;

PK (23).JPG

இப்போது மனம் மாறிவிடக்கூடாதே என்று தான் அவசரப் படுகிறார்கள். மற்றபடி உயர்ந்த குடும்பம், கெட்டிக்காரப் பையன். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கூட வயது கொஞ்சம் அதிக வித்தியாசம் இருந்தாலும் இந்த இடம் கிடைப்பது மாயாவின் அதிர்ஷ்டமே" என்றார் அண்ணன்.

வயது வித்தியாசம் ஒன்பது ஆண்டுகளாக இருந்தது.

ஆனால் அதுவே நல்லது என்று சாரங்கனுக்குத் தோன்றியது. அவர் அறிந்து வைத்திருந்த அளவில் மகளின் தன்மைக்குப் பையனின் வயது சற்றே அதிகம் இருப்பதே மேல். பிழை பொறுத்துப் போவான். என்று எண்ணித்திருமண வேலைகளில் உற்சாகத்தோடு ஈடுபட்டார்.

மாலினியின் திருமண வரவேற்பு சமயத்தில் சத்யாகர் கூறியதை எல்லாம் நினைத்த மாயாவும் உற்சாகமாகத்தான் இருந்தாள். அப்பாடி! இனி இந்த அப்பாவும், அம்மாவும், பேச்சாலும் பாவனையாலும், பார்வையாலுமாக அவளைக் கட்டுப்பாடு செய்ய முடியாது. இவர்கள் எல்லோருரையும் விட்டு விலக்கி, சத்யாகர், அவளை வெகு தூரத்துக்கு அழைத்துச் சென்று விடுவான்.

பெற்றோரை விட்டுப்பிரிவது பற்றி எண்ணும்போது கொஞ்சம் மனம் கலங்கியபோதும் இனி விருப்பம்போல ஆடலாம், பாடலாம் குதிக்கலாம் என்ற நினைவில் அவளுக்கு மகிழ்ச்சி மேலோங்கியது.

மகளின் முகபாவனை, நிம்மதியைத் தந்த போதிலும் ஒருநாள் அவளிடம், "உனக்கு இந்தத் திருமணம் பற்றி சந்தோஷம்தானே, மாயூ?" என்று உள்ளூரக் கவலையுடன் கேட்டாள் சுசீலா.



"மாயூ" என்ற பழைய செல்ல அழைப்பில் மனம் உருகி விட, தாயை, அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள் மகள். இந்தத்திருமணம் அம்மாவின் கடுமையைக் கூட மாற்றி விட்டதே!

ஏதோ மந்திரக்கோலை ஆட்டி. 'சூ மந்திரக்காளி' என்றதும் நடக்கிற மாயாஜாலம் போலத் திருமணம் நல்ல படியாக நிறைவேறியது.

மற்றையச் சடங்குகளும் விருந்தும்கூட செவ்வனே நடந்து முடிந்தது. விருந்தினர் எல்லோரும் விடை பெற்றுச் சென்றனர்.

மணமகனும் மணமகளும் தங்குவதற்கு அந்த ஓட்டலிலேயே அறை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அங்கே, மகளுக்கு, நைஸான பட்டாடைகட்டி லேசான ஒப்பனை செய்து திருஷ்டி கழித்தாள் சுசீலா. "கெட்டிக் காரியாய் இரம்மா. அம்மா சொன்னதெல்லாம் நினைவிருக் கட்டும்" என்று கூறி மகளிடம் பிரியா விடைபெற்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே கணவருடன் சென்றாள்.

ஏதோ தொண்டைக்குள் அடைக்க, விலகிச் சென்று கொண்டிருந்த பெற்றோரைப் பார்த்தபடி நின்றாள் மாயா.

இந்த அம்மா பழைய அடக்குமுறை அல்லி ராணி யாகவே இருந்திருக்கக்கூடாதா? இப்போது இவ்வளவு கஷ்டமாக இராதே!

"கெட்டிக்காரியாக இருப்பது என்றால் இப்படி அம்மா அப்பாவின் முதுகைப் பார்த்துக் கொண்டு நிற்பது அல்ல"

PK (24).JPG

என்று சரசமாகப் பேசியபடியே அவள் பின்னே நின்ற கணவன், குனிந்து அவளது கழுத்து வளைவில் மென்மையாக முத்தமிடவும், முதல் தடவையாக மாயா அதிர்ந்தாள்.

"இன்னமும் இப்படியே நிற்க வேண்டுமா? அத்தை மாமாவின் கார் கூடக் கிளம்பியிருக்கும். இனிக் கதவைத் தாளிட்டு விடலாமில்லையா? யாருக்கும் இலவசக்காட்சி அளிக்க வேண்டாமே" என்று கூறி, அவளை லேசாக உட்புறம் நகர்த்தி விட்டு சத்யாகர் கதவைத் தாளிட்டது அவளுக்கு இரண்டாவது அதிர்ச்சி.

அவளை இலகுவாகத் தூக்கிச் சென்று, உள் அறையில் விட்டு "எவ்வளவு நாட்களாகக் காத்திருக்கிறேன் தெரியுமா?" என்று அவளை உடனே தழுவியவன் உடனே விலகினான்.

"நீ குளித்து விட்டாய் போலிருக்கிறதே! இதோ ஒரே நிமிடம்; நானும் குளித்து விடுகிறேன். இந்த ஃபுல் சூட்டிலும் விளக்கொளியிலுமாக எனக்கும் கசகச என்றுதான் இருக்கிறது" என்று உரைத்துவிட்டுக் குளியல் அறைக்குள் சென்றான் சத்யாகர்.

அவன் விட்ட இடத்திலேயே வேரோடி விட்டவள் போல் அப்படியே நின்றாள் மாயா!

இதை அவள் நினைத்துப் பார்க்கவே இல்லையே!

விடுதலை விடுதலை என்று எண்ணினாயே தவிர, இப்படி ஒரு விலங்கத்தை எதிர் பார்க்கவே இல்லையே!

எப்படிப்பட்ட முட்டாள்தனம்!



ஆனால் அவள் என்றைக்குமே முட்டாள் தானே? இப்போது இன்னும் கொஞ்சம் அதிகமான முட்டாள்-அடி முட்டாளாக நடந்து கொண்டு விட்டாள்.

தன்னைத்தானே நொந்து கொண்டு இருப்பதில் பயன் ஏதும் இல்லை என்று உணர்ந்து இனி என்ன செய்வது என்று சிந்திக்க முயன்றாள் மாயா.

ஆனால், என்ன யோசித்தும் உருப்படியாக எதையும் செய்ய முடியும்போல அவளுக்குத் தோன்றவே இல்லை.

செய்யக் கூடிய ஒன்று, இப்போது கிளம்பி அவள் வீட்டுக்குப் போய்விடலாம். ஆனால் அங்கே அவளுடைய பெற்றோர், அவளை வீட்டுக்குள் விடுவதே சந்தேகம். அப்படியே வேறு வழியின்றி உள்ளே விட்டாலும் இப்போதே மூச்சு முட்டும் இந்தச் சிறை இனிக்காராக்கிருகம் ஆகிவிடும். வெளிச்சம் கூட எட்டிப் பார்க்க முடியாத பாதாளச் சிறைதான்.

எனவே வீடு போவது முடியாத காரியம்.

மற்றபடி உறவில்- பெரியப்பா, சித்தப்பா, அத்தை, சித்தி, ஊகூம். இந்த மாதிரி நிலைமையில் அவளுக்கு அடைக்கலம் கொடுக்கக்கூடியவர்கள் என்று உறவில் யாருமே இல்லை. நட்பு-அதிலும் இல்லை.

யாரையும் சார்ந்திராமல், தனித்து நிற்கும் தைரியமோ தகுதியோ அவளுக்கும் இல்லை.

ஆனால் அதற்காக இவனது உறவை ஏற்பதும் முடியாத காரியம்.. சேச்சே! அப்படி ஏற்றால் அது நியாயமே ஆகாதே!

மாயா திணறித் திண்டாடிக் கொண்டிருந்த போதே குளியல் அறைக்கதவு திறந்தது. டர்க்கி டவலால் ஆன

PK (25).JPG

இரவுக் கவுன் ஒன்றை அணிந்து கொண்டு அங்கிருந்து சத்யாகர் வெளியே வந்தான்.

மனைவி, முன்பு அவன் விட்ட இடத்திலேயே நிற்கக் காணவும், "என்ன மாயாதேவி, அந்தப் பக்கம் தனியாகச் செல்லப் பயமா?" என்று மெல்லிய பின்னல் திரையால் மறைக்கப்பட்டிருந்த அலங்காரக் கட்டிலைச் சுட்டிக்காட்டி உல்லாசமாக வினவினான்.

அவள் பதுமையாய் நிற்கவும், "பயம் வேண்டாம்; பத்தினியே. இதோ அரும்பெரும் துணைவன் வந்து விட்டேன். நாம் இருவருமாகத் தைரியமாக சம்சார சாகரத்தில் குதிக்கலாம் வா" என்று மாயாவின் கையைப் பற்றினான்.

அவனது பார்வையிலும் தொடுகையிலுமாக அவளது உடல் சிலிர்த்தது. கண்ணாலேயே பெண்ணாய் உணர வைக்கிறானே!

தீச்சுட்டாற்போலக் கையை உருவிக் கொண்டவள், துள்ளிக்குதித்துப் பின் நகர்ந்தாள். "அய்யோ வேண்டாம்! வேண்டாம்!" என்று பதறியபடியே முன்புறம் ஓடி ஒரு சோபாவில் தொப்பென அமர்ந்து முகத்தை மூடிக் கொண்டு விசும்பலானாள்.

சில கணங்கள் அங்கே அவளது விசும்பல் தவிர அமைதி நிலவியது. பிறகு நிதானமாய் நடந்து வந்து, மாயாவுக்கு எதிரே ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு "என்ன வேண்டாம்?" என்று கேட்டபோது சத்யாகரின் குரல் வித்தியாசமாக ஒலித்தது.



அவள் பேசாமல் விசும்பவும் மீண்டும் சற்று நேரம் பேசாதிருந்து விட்டு, "முதலில் அழுகையை நிறுத்து மாயா" என்றான் அவன் அழுத்தமான குரலில்.

மேலே தொடர்ந்து அழ மாயாவுக்கு அச்சமாக இருந்தது. கையால் வாயைப் பொத்தி அழுகையை அடக்க முயன்றாள்.

"குளியல் அறைக்குச் சென்று முகம் கழுவு, அழுகை நின்றுவிடும்."

உணர்ச்சி துடைத்த அந்தக் குரல் அவளுள் குளிர் பரப்பியது.

அவன் சொல்லை மீறும் துணிவின்றி எழுந்து சென்று, முகம் கழுவிவிட்டுத் திரும்பியபோது மெய்யாகவே மாயாவின் கண்ணீர் விட்டிருந்தது.

உள்ளூர அச்சத்துடனேயே அவள் மெல்லத் தலையை நீட்டவும், "வா வந்து உட்கார்" என்று சற்றுமுன் அவள் காலி செய்த இருக்கையை காட்டினான் சத்யாகர்.

அவள் அமர்ந்ததும், "இப்போது சொல், என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"..."

"மாயா, அன்று, உன்னைப் பார்க்க வந்த போதே, உன்னிடம் கேட்டு, நீ சம்மதம் தெரிவித்த பிறகுதான் இந்தத் திருமண ஏற்பாடுகளைத் தொடங்கியதே. திருமணம் என்றால் என்னவென்று தெரியாத அளவு நீ பச்சைக் குழந்தை அல்ல, இல்லைதானே?"

PK (26).JPG

திடுமெனக் குரல் அழுத்தம் பெறவும் திடுக்கிட்டு நிமிர்ந்த "இல்லை" என்று பதிலுரைத்தாள் மாயா.

"பின்னே?... சொல் மாயா. நீ சொன்னால்தானே எனக்கும் விவரம் புரியும்? சொல்லு அன்று ஏன் சம்மதித்தாய். இன்றைக்கு அதில் மாற்றம் ஏன்? சொல்லு."

"அன்றைக்கு... அன்றைக்கு நான் வந்து, நான் என் அம்மா அப்பாவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட எண்ணி, சுதந்- திரமாய் வாழலாம் என்றுதான் சரியென்றேன்" என்றாள் மாயா.

"சுதந்திரமா. ஏன், நான் உன் பெற்றோரை விட அதிகக் கண்டிப்பாக இருக்க மாட்டேன் என்று உனக்கு என்ன நிச்சயம்?" என்று அவன் ஒரு மாதிரிக் குரலில் கேட்கவும் மாயா மிரண்டு விழித்தாள்.

இதையும் அவள் எண்ணிப் பார்த்தாளில்லையே!

லேசாகத் தலையசைத்து விட்டு "எதற்காக உன் வீட்டில் உனக்கு அவ்வளவு கட்டுப்பாடு?" என்று சாதாரணக் குரலில் அவனே கேட்டான்.

"நான்...நான்..." என்றவள் மீண்டும் திகைத்தாள்.

இந்த விஷயம் பற்றி வெளியே யாரிடமும் மூச்சுக்கூட விடக் கூடாது என்று அவளுடைய பெற்றோர் திருப்பித் திருப்பித் அவளிடம் வற்புறுத்திச் சொன்ன விஷயம் எப்படிச் சொல்வது?

ஆனால் அதைச் சொல்லாமல் அவள் நிலையை இவனுக்கு எப்படிப் புரிய வைக்க முடியும்? அவனே



சொல்லவில்லையா, சொன்னால்தானே விவரம் புரியும் என்று?

சிறு யோசனையின் பின், கணவனிடம் சொல்வதில் தப்பில்லை என்று முடிவு செய்தாள் மாயா. சொல்லாமல் இருப்பது நியாயமாகவும் தெரியவில்லை.

"வந்து...வந்து நான் ஒருவனைக் காதலித்தேன். மூ...மூன்று ஆண்டுகளுக்கு முன்பு..."

"மூன்று ஆண்டுகளுக்கு முன்பா?...பதினாறு வயதிலேயே காதலா? யாரவன்?"

"எங்கள் தோ...தோட்டக்காரனுடைய மகன் பெயர் பாண்டியன்... பா...பாண்டி என்று கூப்பிடுவது."

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு மேலே சொல்லு என்பது போலத் தலையை அசைத்தான் சத்யாகர்.

"ஊரில் இருந்து லீவுக்கு பட்டணத்தைச் சுற்றிப் பார்க்க வந்தான். பார்த்துமே எங்கள் இரண்டு பேருக்கும் பிடித்துப் போய் விட்டது... நான் பார்க்கும்படி நின்று நன்றாகப் போஸ் கொடுப்பான்... நான் ஃப்ளையிங் கிஸ் கொடுப்பேன்..."

"தெய்வீகக் காதல்! எப்படி முறிந்தது?"

"அது..."

"நீங்கள் இரண்டு பேரும் கட்டியணைத்து முத்தமிட்டதை உன் பெற்றோர் பார்த்துவிட்டார்களாக்கும்?"

"சீச்சீ!"

"ஏன்? சினிமாக்களில் அப்படித்தானே வருகிறது?"

PK (27).JPG

குரலில் ஏதோ விரிசல் ஒலித்ததோ?

கண்டு கொள்ள முடியாமல், "திருமணத்துக்கு முன் அதெல்லாம் தப்பு என்பது கூடத் தெரியாத அளவுக்கு நான் முட்டாள் அல்ல" என்று நிமிர்ந்து கூறினாள் மாயா.

"ஓகோ! அதைவிடக் கொஞ்சம் குறைவான முட்டாள்தானாக்கும்?"

கேலி செய்கிறானா கோபப்படுகிறானா என்று புரியாமல் அவனைக் கூர்ந்து நோக்கினாள் அவள்.

"அப்படித்தானே உன் பெற்றோர் கூறியிருப்பார்கள்?" என்ற சாதாரணக் குரலில் இயம்பியவன் மேலே கேட்டான் "இன்னமும் உன் பெற்றோருக்கு எப்படித் தெரிந்தது என்று சொல்லவில்லையே?"

"அது... முதலில் அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களாகச் சம்மதிக்க மாட்டார்கள்; இரண்டு பேரும் ஊரை விட்டு ஓடிப்போய்க் கல்யாணம் செய்து கொண்டால் பிறகு எல்லாம் சரியாகி விடும் என்று பாண்டி சொன்னான்..."

"சினிமாவில் வருகிற மாதிரி!"

"அதேதான்" என்று ஜிமிக்கி அசையத் தலையாட்டினாள் அவள். உடனேயே, புருவம் சுருக்கி, "ஆனால், அது என்ன சார், சினிமாவில் என்றால் எத்தனை தரம் பிடிபட்டாலும், காதலர்கள் தப்பித் தப்பி ஓடிவிடுகிறார்கள். ஆனால் நிஜவாழ்க்கையில் மட்டும் உடனே மாட்டிக் கொள்கிறார்களே. எப்படி?"

தன் கதையில் தீவிரமாக ஆழ்ந்திருந்தவள் சற்றும் யோசியாமல் அவனிடமே சந்தேகம் கேட்டாள்.



"சினிமாவில் டைரக்டர் சொன்னால்தானே பிடிக்கவே முடியும்?"

குரலில் நிச்சயமாய் ஏளனத்தை உணர்ந்து மாயா நிமிர்ந்து நோக்கவும் சத்யாகரே தொடர்ந்து, "விரைவிலேயே மாட்டிக் கொண்டீர்களாக்கும்?" என்று கேட்டு கதையைத் தொடர வைத்தான்.

"கிளம்பவே இல்லை" என்றாள் மாயா மீண்டும் பழைய நினைவில் ஆழ்ந்து. "அம்மா, அப்பாவை விட்டுப் போக அழுகை வந்ததா? அழுதுகொண்டே இருந்ததில் நேரமாகி விட்டது. பிடித்த உடையெல்லாம் எடுத்து வைத்தால் பெட்டி மூட முடியாமல் எதை விட்டுப்போவது என்று குழம்பி, ரொம்ப யோசித்து, எடுத்து வைத்து, ஒருவழியாகப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிளம்பினால், விடியற் காலம் அப்பா தியானம் செய்கிற நேரம் ஆகிவிட்டது. பெட்டியோடு என்னை அவரே பார்த்து விட்டார். அப்புறம்...கடவுளே! அப்பா திட்டு, அம்மா திட்டு... அம்மா என்னை அடிக்கக் கூடச் செய்தார்கள்..." பழைய நினைவில் அவளது விழிகளில் நீர் ததும்பி வழிந்தது.

"அந்தப் பாண்டி...அவன் ஒன்றுமே செய்யவில்லையா?"

"பாண்டி என்ன ஆனான் என்றே தெரியவில்லை... தோட்டக்காரனைக் கணக்கு தீர்த்து அன்றே ஊருக்கு அனுப்பிவிட்டார் அப்பா அன்றிலிருந்து எனக்கு ஒரே கட்டுப்பாடு. எப்படியும் பாண்டி வருவான் என்று எதிர்பார்த்தேன். ஆனால், பணம் வாங்கிக்கொண்டு ஓடி விட்டான் என்று அப்பா சொன்னார். பாண்டியை மறந்துவிட வேண்டும் என்றார். இந்த விஷயம் யாரிடமும் சொல்லக் கூடாது என்று

PK (28).JPG

அப்பா, அம்மா இரண்டு பேருமே சொன்னார்கள். ஆனால் உங்களிடம் மறைக்க எனக்கு மனம் இல்லை..."

"நன்றி" என்றான் சத்யாகர் சுருக்கமாக.

புரியாமல் நோக்கியவளிடம், "என்னை நெருக்கமானவனாக எண்ணி இதையெல்லாம் சொன்னதற்கு" என்று விளக்கியபோது, சர்வ நிச்சயமாய் அவன் குரல் அவளை மட்டும் தட்டியது.



5

சத்யாகரின் குரல் உசுப்ப, ஏதோ சொல்ல வாய் திறந்த மாயா அதைச் சொல்லாமலேயே உதட்டைக் கடித்து அதை அடக்கினாள். சத்யாகரின் கோபத்தில் குற்றமில்லை!

தலைகுனிந்து, மெல்லிய குரலில், "சாரி" என்று வருத்தம் தெரிவித்தாள்.

"ஆனால், உன் 'சாரி'க்கு ஒரு நன்றி" என்ற அவன் பழைய குரலிலேயே கூறவும், அவளுக்கும் ஆத்திரம் வந்துவிட்டது.

இவன் என்ன, குனியக்குனியக் குட்டுகிறானே! ஏதாவது பொய் சொல்லி ஏமாற்றியிருந்தால் பரவாயில்லையா?

"உண்மையைச் சொன்னது தப்பு என்கிறீர்களா?" அவனை நேராகப் பார்த்துக் கேட்டாள்.



தோளைக் குலுக்கிவிட்டு, "சொன்ன நேரம்தான் தப்பு. சில சமயங்களில் உண்மையை மறைப்பது கூட மிகவும் அவசியம்தான்" என்றான் அவன் "இப்போதும் அதுபோல ஒரு சந்தர்ப்பம்தான்—பொறு. நான் சொல்வது உன் விஷயம் அல்ல.. அது பற்றிப் பிறகு பேசுகிறேன். அதற்குமுன்—சொல் மாயா, இப்போது நீ இந்தக் கதையை எல்லாம் என்னிடம் ஏன் சொன்னாய்?" என்று கேட்டான்.

கன்னங்களை சூடேறப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு பேசாதிருந்தாள் மாயா.

கண்கள் இடுங்க அவளை நோக்கிவிட்டு, எழுந்து சென்று கண்ணாடி ஜன்னல் வழியே வெளிப்புறம் பார்த்தான் சத்யாகர். "கணவன் மனைவி உறவை என்னோடு ஏற்றுக் கொள்ள உனக்கு விருப்பம் இல்லை. அப்படித் தானே?"

"..."

திரும்பி, "பிறகு சொல்கிறேன் என்றேனே, அதை இப்போது கேள்." என்றவன் மீண்டும் வந்து சோபாவில் அமர்ந்தான். "எங்கள் வீட்டில், என் திருமணம் எல்லோராலுமே வெகு ஆவலாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. அவர்கள் விருப்பம் போல விட்டிருந்தால் ஐந்தாண்டுகளுக்கு முன்னதாகவே அதை நடத்தி முடித்திருப்பார்கள். ஆனால் நானேதான் என் மனைவியைத் தேர்ந்தெடுப்பேன் என்று நான் பிடிவாதமாக இருந்ததால், என் விருப்பத்துக்கு மதிப்பு கொடுத்து இவ்வளவு நாள் சும்மா இருந்தார்கள். புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நீ என் தேர்வு."

PK (29).JPG

தரையில் பதித்த பார்வையை மாயா உயர்த்தவே இல்லை.

"ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து விட்டேன் என்று தெரிந்ததும் என் பெற்றோர் எவ்வளவு ஆனந்தப்பட்டார்கள் தெரியுமா? யார் என்ன என்று கூடக் கேட்கவில்லை. உன்னைப் பார்த்ததுமே அவர்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. உனக்கு அவர்கள் பரிசளித்த நகை, சேலைகளைப் பார்த்திருப்பாய். உன் மீது அவ்வளவு அன்பு! ஏன் தெரியுமா? என்னோடு மனம் ஒன்றி சிறப்பாகக் குடும்பம் நடத்திக் குலம் தழைக்கச் செய்வாய் என்ற ஆசைதான்."

"அவர்களிடம் சென்று, விஷயமே வேறு என்று சொல்வது முடியாது. அப்பா ரத்த அழுத்தக்காரர். அம்மாவுக்குப் பலவீனமான இதயம். இவர்களிடம் இந்த விஷயம் சொல்வதும் ஒன்றுதான், ஒரு பாட்டில் தூக்க மாத்திரையைக் கொடுத்து விழுங்கச் செய்வதும் ஒன்று தான்."

ரொம்பவும் தவறிழைத்தவளாக உணர்ந்து "மெய்யாகவே ரொ..ரொம்பவும் சாரி" என்று முணு முணுத்தாள் மாயா.

"இதில் என் பிழையும் இருக்கிறது" என்றான் அவன் பெருந்தன்மையோடு. "நான் முன்பே ஊகித்திருக்க வேண்டும். எந்த விதப் பந்தங்களிலும் மாட்டியிராத பெண்ணாக, நீ என்னை ஒரு தரம் கூடப்பார்க்கவே இல்லை... 'வருங்கால மனைவி' என்ற பேச்சில் கூட நீ அக்கறை காட்டவில்லை. அப்போதே எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அதுவே, அக்கறை காட்டாத தன்மையே என்னை ஈர்த்தது



எனலாம். பொதுவாகப் பெண்களின் கொக்கிப் பார்வைக்கே பழக்கப்பட்டிருந்ததால், அது இல்லை எனவும் அடியோடு வீழ்ந்து விட்டேன்." என்று அவன் விளக்கியபோது மாயாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

மாங்காய் அடிக்க எறிந்த கல் அடுத்தவர் மண்டையைப் பிளப்பது போல, அவள் தன் வசதிக்கு ஏதோ செய்யப் போக சற்றும் யோசிக்காமல் அவன் வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்தி விட்டாளே! பச்சாதாபமும் கழிவிரக்கமும் மாயாவின் பூ மணம் நொந்து தவித்தது.

"வந்து... ரொம்ப ரொம்ப சாரி..." என்றாள். இன்னமும் குன்றிப் போய். "நான் பெரிய தப்பு செய்து விட்டேன். உங்கள் வாழ்க்கையை நாசம் செய்து விட்டேன்..."

"வேண்டாம்" என்றான் சத்யாகர் அழுத்தத்துடன்; "அனாவசியமாக அதிக வருத்தப்படாதே. இப்போது எதுவும் அடியோடு குடி முழுகிப் போய் விடவில்லை. நானும் இலகுவில் தோல்வியை ஒத்துக் கொள்கிறவன் அல்ல."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"சொல்கிறேன்.. முதலில் நீ இன்று ஏதாவது சாப்பிட்டாயா?"

"ம். பிளந்து கட்டினேனே. நீங்கள்?"

லேசாகத் தோளைக் குலுக்கி "அவ்வளவாக இல்லை. இப்போது தான் இங்கே ஏதேதோ வைத்திருக்கிறீர்களே. முதலில் பசிக்கு ஏதாவது சாப்பிடலாம்" என்று அவன் முடிக்குமுன் மாயா எழுந்து விட்டாள்.

PK (30).JPG

ஆனால் அங்கே இருந்தவற்றைப் பார்த்ததும், "பலகாரங்களும் பழங்களும் பாலும்தான் இருக்கிறது. எல்லாம் இனிப்பு. இதைச் சாப்பிட்டு பசி அடங்குமா? சாப்பாடு அல்லது சப்பாத்தி குருமா ஆர்டர் பண்ணலாமா?" என்று கணவனிடம் கேட்டாள்.

லேசாக முறுவலித்து, "அவசியமில்லை" என்றான் சத்யாகர்.

"என்னைப் பொறுத்தவரை ஒருவேளை உணவு இப்படித்தான் இருந்தாக வேண்டும். எந்தவிதக் கட்டாயமும் இல்லை. பழங்களும் பாலுமே போதும் வா. என்னோடு நீயும் கொஞ்சம் எடுத்துக் கொள்."

அவன் மலைவாழைப்பழத்தை தோலுரித்து உண்ணும் போதே, ஆப்பிளைக் கழுவிக் கொண்டு வந்து வெட்டி வைத்தாள் மாயா. மேலும் ஆரஞ்சுகளை உரித்து, தோல் விதை நீக்கவும். "ஊகூம். என்னை ஒரேயடியாகச் சோம்பேறியாக்காதே. இதை எல்லாம் நானே செய்து கொள்வேன். வா. நீயும் சாப்பிடு" என்று அவளையும் கொஞ்சம் உண்ணச் செய்தான்.

சூடான பாலை அருந்தி முடித்தபோது மாயாவுக்கும் தெம்பாக உணர்ந்தாள்.

பால் அருந்திய தம்ளர்களை இருவருமாகக் கழுவி வைத்தபின் மீண்டும் பேச்சைத் தொடங்கினான் சத்யாகர். "இனி மீண்டும் நம் பிரச்சினைகளைப் பற்றிப் பேசலாம். பார் மாயா, நீ சொன்ன கதை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. ஒன்றும் அறியாத மடந்தைப் பருவம் உனக்கு. அந்த நாளில் நீ ஒருவனை நேசித்ததாக எண்ணினாய்..."



"இல்லை. நேசித்தேன்" என்று திருத்தினாள் மாயா. "அத்தோடு நான் ஒன்றும் அப்போது ஒன்றும் தெரியாத பாப்பா அல்ல. என் பெற்றோரின் இந்தக் கெடுபிடியாலும் இன்றுவரை நான் பாண்டியை மறக்கவும் இல்லை."

"மறக்க விடவும் இல்லை..."

"என்னது?"

"ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை அவனோடு ஒரு காலத்தில் கொண்ட நேசத்துக்காக வாழ்வையே அழித்துக் கொண்டாக வேண்டிய அவசியம் இல்லை."

"ஒரு பூ ஒரு முறைதான் மலரும்."

"ஒரு செடி எத்தனை தரம் பூக்கிறது?"

"வாழை மரம் ஒரே தடவைதான்..." என்றாள் மாயா பிடிவாதக் குரலில்.

"ஆனால் தென்னை... ஏன் மாயா எப்போதும் இல்லை. பூ, மரம், மட்டையாகவே இருக்க முயற்சிக்கிறாய்? கொஞ்சம் மனிதப் பிறவியாய்த் தான் யோசியேன்?"

"யோசியாமலா? இந்த மூன்று ஆண்டுகளாக, எனக்கு ஒரு கேளிக்கை கிடையாது... அப்பா அம்மா இருவரும் இல்லாத போது டி.வி.யில் வீடியோவில் அவர்களுக்குத் தெரியாமல் எதையாவது பார்ப்பது தவிர. ஒரு விளையாட்டு வேடிக்கை, ஒரு பிக்னிக் பள்ளி கல்லூரியில் சகமாணவிகளோடு சுற்றுலா, உறவினர் வீடு...எது...வுமே கிடையாது தெரியுமா? பாடம் படிக்கிற, தூங்குகிற நேரம் போக மற்ற நேரம் நான் வேறு என்ன செய்தேன் என்கிறீர்கள்?... படிக்கக் கூடப் புதிதாக ஒன்றையும் எடுத்துவிடக் கூடாது. நல்லது

கெட்டது தெரியாத என் புத்தி இன்னமும் கெட்டுவிடுமாம். ராமாயணம், பாரதம், தமயந்தி சரித்திரம், சதி அனுசூயா, அருந்ததி கதை தாங்க முடியாமல் போர் அடிக்கும்போது இவைகளையும் படிப்பேன். வேறு வழி? ஆனால் முக்கால் வாசி நேரம் யோசனைதான்" என்றாள் மாயா வெறுத்த குரலில்.

"குருட்டு யோசனை!"

ஒரு விரைப்புடன் நிமிர்ந்துவிட்டு அலுப்புடன் மீண்டும் சேர்ந்தாள் மாயா.

சிவக்கச் சிவக்க மருதாணி ஏறியிருந்த நகங்களை கவனமற்று வருடிக்கொண்டிருந்த மனைவியைப் பார்த்தபடி சற்று நேரம் பேசாமல் இருந்தான் சத்யாகர்.

அவள் செய்தது பிழைதான். பெரிய தவறுதான். ஆனால் பரிவு காட்டிப் புரிய வைப்பதற்கு பதிலாகக் கண்டிப்பும் கடுமையுமாக அவள் மனதைக் குறுக்கி விட்டார்களே என்று மாயாவுடைய பெற்றோர் மீது தான் அவனுக்கு கோபம் வந்தது. அனுசூயாவாம் அருந்ததியாம்...ஆனால் இன்றைய பிரச்சினைக்கு அந்தக் கோபம் தீர்வு கண்டுவிடாது.

கிறங்க வைக்கும் எழிலான பத்தொன்பது வயது மேனிக்குள் பதினாறு வயது சிறுமியின் உள்ளம் வளர்ந்தும் வளராமலும் தடுமாறுவது புரிந்தது.

அவளைப் பார்க்கையில் மேலே என்ன செய்வது என்று அவனாலும் யோசிக்க முடியாது போலத் தோன்றியது.

லேசாகத் தலையை உலுக்கிவிட்டுக் கொண்டு "மாறுவது மனம் என்பார்கள் மாயா" என்றான் இதமான குரலில்.



"மாறிக்கொண்டே இருந்தால் எப்படியாம்?" என்று மடக்கினாள் அவள். "ஒழுக்கம், கற்பு எல்லாம் அப்புறம் என்ன ஆகும்? மற்ற நாடுகளில் நீங்கள் பார்த்ததை வைத்துப் பேசாதீர்கள்."

"மற்ற நாட்டுப் பெண்கள் எல்லாம் ஒழுக்கம், கற்பு எதுவும் இல்லாதவர்களா? யோசித்துப் பேசு மாயா!"

"நான் நம் நாடு பற்றிச் சொன்னேன். "ஒரு முறை தான் காதல் வரும் தமிழர் பண்பாடு" என்று கண்ணதாசன் கூட."

"அந்த ஒன்று எது என்பதுதான் கேள்வி? என்றும்கூட அவரே சொல்லியிருக்கிறார் தெரியுமா?"

மதியீனமாக ஒருதரம் நடந்து கொண்டு விட்ட போதும் மாயா முட்டாள் அல்ல. சத்யாகரின் கருத்தை உணர்ந்து, நிமிர்வுடன், "பாண்டிதான் என்பது என் முடிவு. அவனைப் பார்க்கும் போதெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா? அவனைப் பாராமல் எவ்வளவு வேதனைப் பட்டேன் தெரியுமா? அவனை நினைக்காமல் ஒரு நாள் கூட இருந்ததில்லை. இது காதல் இல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?"

வெறும் கவர்ச்சி. வயதுக் கோளாறு. பருவத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த சிறுமிக்கு அதைப் பாராட்டும் ஆண் பார்வையினால் ஏற்பட்ட கிளர்ச்சி இன்னும் என்னென்னவோ அவனால் சொல்ல முடியும். ஆனால் அவளை ஒத்துக் கொள்ள வைப்பதுதான் கடினம். இப்போதைக்கு முடியாத காரியமாகவே தோன்றிற்று.

PK (32).JPG

எனவே, செய்கை அறியாத ஆத்திரத்தில், "அப்படி யானால் என்னை ஏன் மணந்தாய்?" என்றாள் சத்யாக சுள்ளென்று.

ஊசி குத்திய பலூனாய் சொத்தென்று ஒடுங்கிப் போனாள் மாயா. "தப்புதான். மன்னிக்க முடியாத குற்றம்தான். அதற்கு நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் அதை நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்" என்றாள் இறங்கிய குரலில்.

தலையசைத்து, "பார் மாயா, சும்மா எதையாவது சொல்லக்கூடாது. இப்போது என்னைக் கணவனாக ஏற்பதுதான் உனக்கு ஏற்ற தண்டனை என்று நான் சொன்னால் நீ என்ன செய்வாய்?" என்று கணவன் கேட்கவும் திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

"அப்படிச் சொல்வதும் அதற்கு உன்னைப் பணிய வைப்பதும்கூட எனக்கு முடிகிற காரியம்தான். ஆனால் என் உறவை ஒரு தண்டனையாக நீ ஏற்பது அசம்பாவிதம். நம் உறவு, இருவர் மனமும் ஒத்து நிகழ வேண்டும். இப்போது மறுத்து எதுவும் பேசவேண்டாம், மாயா. அப்படி நடக்கும் என்பது என் நிச்சயமான நம்பிக்கை அதுவரை. திருமண வாழ்வு வெற்றி பெறக் கணவன் மனைவி இடையே நட்பு மிகவும் அவசியம். நாம் முதலில் நண்பர்களாக வாழ்க்கையைத் தொடங்குவோம்" என்று உரைத்தபடியே கட்டிலிலிருந்து ஒரு தலையணையையும், போர்வையையும் எடுத்து சோபாவில் அவள் அருகே வைத்த சத்யாகர் மீண்டும் சென்று கட்டிலில் அமர்ந்து "குட் நைட்" என்றவன்



அத்தோடு பேச்சு முடிந்தது என்பது போல படுத்து, கையை நீட்டி படுக்கை அருகே இருந்த 'ஸ்விட்சைத்' தட்டி விளக்கை அணைத்தான்.

அப்பாடி என்று நிம்மதியாய் நெடு மூச்சுவிடப் போன மாயாவுக்கு ஏனோ அது முடியாமல், எதிலேயோ ஏமாந்து விட்டது போன்ற உணர்வில் பெருமூச்சுதான் வந்தது.



6

அந்த 'குட் நைட்'டுக்குப் பிறகு சத்யாகரிடம் அசைவே இல்லை. விரைவிலேயே காதில் விழுந்த சீரான மூச்சின் மெல்லிய ஒலி அவன் தூங்கிவிட்டான் என்பதை மாயாவுக்கு உணர்த்தியது.

சற்று நேரம் பொறுத்து, நினைவு வந்து மாயா சொன்ன பதில் 'குட்நைட்' கூட அவன் காதில் விழுந்ததோ என்னவோ? அவள் அறியாள்.

ஆனால், வெகுநேரம் வரை மாயாவால் தூங்க முடியவில்லை. புதியவனான ஓர் ஆண் மகனுடன் தனியே ஓர் அறையில் இரவைக் கழிப்பது தூக்கத்தைக் கெடுத்திருக்கலாம்.

தூக்கமற்ற தனிமையும் இருளும் சிந்தனையைத் தூண்டின.



PK (33).JPG

அவளை மணந்தது தன் விருப்பப்படி என்றான் சத்யாகர்.

விரும்பி மணந்தவனால் எப்படி நிச்சிந்தையாக உறங்கமுடிகிறது? ஒருவேளை அவனும் ஆசைப்பட்டு மணக்கவில்லையோ? பெற்றோர்களின் தொணதொணப்பு பொறுக்க முடியாமல், ஒரு நல்ல குடும்பத்து, அழகான பெண்ணைப் பார்த்ததும், 'இவள் தான்' என்று கைகாட்டி விட்டானோ?

முன் பிறவி போலத் தோன்றிய மூன்று ஆண்டுகளுக்கு முன் அந்தப் பாண்டி அவளைத் தொடப் பறந்ததும், திருமணத்துக்கு முன் தொடுவது என்றால் காதலே கிடையாது என்ற பிறகு கஷ்டப்பட்டு அவன் ஒதுங்கி இருந்ததும் நினைவு வந்தது.

இவனுக்கு அந்த மாதிரி ஆசை அவளிடம் இல்லையோ என்னவோ என்று எண்ணம் ஓடும் போதே பிறகு எதற்காக அவளைத் தேடி வந்து திருமணம் புரிய வேண்டும் என்று அவளுக்கு எரிச்சல் வந்தது.

எதை எதையோ யோசித்துக் களைத்துப் போய் அவள் எப்போது உறங்கினாளோ? காலையில் மாயா கண்விழித்தபோது சத்யாகர் குளித்து முடித்திருந்தான்.

கண்ணாடி சன்னல் வழியே வெளியே வெளிச்சத்தைக் கண்டு அவள் விழுந்தடித்துக் கொண்டு எழவும், "ஈஸி மாயா. என்ன அவசரம் சூரியன் உதிக்கு முன் வாசல் தெளித்துக் கோலம் போட்டாக வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. பல் தேய்ப்பது, குளிப்பது எல்லாம் மெல்லவே செய்யலாம். உனக்குக் காலை காபி எப்போது? கொண்டு வரச்



சொல்லட்டுமா?" என்று அவளை அமைதிப்படுத்திக் கேட்டான் அவள் கணவன்.

மனம் இலகுவாகிவிட, "ம்..சொல்லுங்கள். நான் பல் துலக்கிவிட்டு வருகிறேன்" என்று கிளம்பினாள் அவள்.

அவள் குளித்தானதும், காலை உணவையும் அறைக்கே வரவழைத்தான் சத்யாகர்.

உணவு முடிந்ததும் அவளை நேராகப் பார்த்து, "நாம் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது மாயா" என்றான் பிசிரற்ற குரலில்.

"ஏ..என்ன?"

"இனி நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி பேச வேண்டும். தனிமையில் நான் உன்னை எந்தவிதமான நிர்ப்பந்தமும் செய்யப் போவது இல்லை. ஆனால் மற்றவர்கள் முன்னிலையில் எப்படி நடந்து கொள்வது என்று முடிவு செய்ய வேண்டும்."

"எப்படி என்று நீங்கள் சொல்லுங்கள், செய்கிறேன்" என்றாள் மாயா சின்னக் குரலில். ஏக்கமும் பயமுமாய் அவனை நோக்கின அவளது அழகிய விழிகள்.

"என்னம்மா?"

"என்னை...என்னை எங்கள் வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட மாட்டீர்களே?"

ஒரு கணம் அவளை ஆழ நோக்கி, மறுப்பாக தலையசைத்தான் சத்யாகர். "நானாக உன்னை ஒருநாளும் அப்படி அனுப்ப மாட்டேன்" என்றான் உறுதியோடு.

முகம் மலர, நிமிர்ந்து அமர்ந்து, "சொல்லுங்கள், நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்" என்று கேட்டாள் அவள்.

"பார் மாயா, குற்றம் சாட்டுவதாகவோ குறை கூறுவதாகவோ எடுத்துக் கொள்ளாமல் என் பேச்சைக் கவனிக்க வேண்டும். சரிதானா? என் பெற்றோர் நிலைபற்றி நேற்று சொன்னது நினைவிருக்கிறதா? எங்கள் வீட்டில் என் பெற்றோர், என் சகோதரி எல்லோருமே எப்போது, எப்போது என்று மிகவும் ஆவலாய் எதிர்பார்த்தது என் திருமணம். நாலைந்து ஆண்டுகளாகக் காத்திருந்து அலுத்துப் போனவர்கள் அவர்கள். இப்போது திருமணம் நடந்ததில் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்திருப்பவர்களும் கூட. நம் இல்லற வாழ்வு சரியில்லை என்று தெரிந்தால் அவர்கள் மிகவும் நொந்து போவார்கள். அது எனக்குப் பிரியமில்லை. அதனால் அவர்கள் முன்னிலையில் நாம் சாதாரணக் கணவன் மனைவியாக-சற்று அதிகமான அன்புள்ள தம்பதியாக நடந்து கொள்ள வேண்டும். அதிக அன்பு என்றால், பார்க்கும் போதெல்லாம் அணைத்து, முத்த மிட்டு என்று இல்லை. நம் நாட்டில் அது அவசியம் இல்லை. ஆனால் பார்க்கும்போது ஒரு புன்னகை, ஒரு பேச்சு, அருகில் இருப்பது... இது போலத்தான். உன்னால் முடியுமல்லவா?"

முடியும் என்று தலையாட்டினாள் மாயா.

"நல்லது. இனி அடுத்தது. நம் அந்தரங்கத்தில் நம் உறவு. பார் மாயா நீயே சொன்னது போல் இது மேல் நாடல்ல. இன்று திருமணம். நாளை மணவிலக்கு என்று பிரிவையும் எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. என்னைப் பொறுத்த வரையில் இந்தத் திருமணம்தான் என் வாழ்க்கை முழுமைக்கும்.



ஆனால்..." என்று நிறுத்தியவன், அவளை நேராக நோக்கி மேலே பேசினான். "ஆனால் வாழ்க்கை முழுவதும் நாம் இப்படியே வாழ்ந்து முடிப்பது சாத்தியம் அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். இச்சைகள் உண்டு. ஆசைப்பட்டு மணந்த பெண்ணைத் தூரவே வைத்து வழிபட என்னால் முடியாது-பொறு. முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன். உன்னை நான் கட்டாயப்படுத்த மாட்டேன் என்பது உறுதிதான் ஆனால் உன் மனம் தானாகவே மாறும் என்பது என் நம்பிக்கை. மாற மாட்டேன் என்ற பிடிவாதத்துடன் இராமல் நம் இல்லறம் வெற்றிபெற நீயும் முயற்சி செய்தால் நிச்சயம் மாறும். அப்படி முயற்சி செய்வாய் என்ற உறுதியை நீ எனக்குத் தர வேண்டும்."

அது நடக்கக் கூடியது என்று மாயாவுக்குத் தோன்றவில்லை. ஆனால் கண்ணுக்குக் கண் நேராக பார்த்து அவன் கேட்கும்போது, அவளால் மறுக்கவும் முடியவில்லை. விழிகளில் ஐயம் அகலாமலே, "சரி முயற்சி செய்கிறேன்" என்று வாயால் ஒப்புதல் அளித்தாள்.

ஒப்பந்தத்தை உறுதி செய்கிறவன் போலத் தன் கையை நீட்டினான் சத்யாகர். மெல்லத் தன் கையை அவன் கையில் வைத்தாள் மாயா. தன் வலிய கரத்துள் அவளது பட்டுக் கரத்தை அடக்கிக் குலுக்கினான் அவன்.

குலுக்கிய கையை உடனே விட்டு விடாமல் குனிந்து அவளது மென்மையான விரல்களில் லேசாக முத்தமிட்டான் அவன். "என்னால் காத்திருக்க முடியும் மாயா. ஆனால் என் பொறுமையை நீ அளவுக்கு மீறி சோதித்து விடக் கூடாது." என்றவன் அதற்கு மேல் அவளைச் சங்கடப்படுத்தாமல் மனைவியின் கையை விடுவித்தான்.

PK (35).JPG

கணவன் தன்னைப் புரிந்து கொண்டதோடு இதமாகவும் நடந்து கொள்வதில் மாயாவுக்கு மகிழ்ச்சி.

அந்த உற்சாகத்தில் மகளைப் பார்த்ததில் அவளுடைய பெற்றோருக்கு ஆனந்தம்.

மகளையும் மருமகளையும் சேர்த்துப் பார்ப்பதிலேயே சத்யாகருடைய பெற்றோரும் சந்தோஷப்பட்டனர்.

இந்த இன்ப நிலையில் இருவருடைய பெற்றோரையும் விட்டுவிட்டு சத்யாகரும் மாயாவும் தேனிலவுக்குக் கிளம்பினர். வெளிநாட்டுப் பயணம். சொந்த வீட்டில் கூட தோட்டத்தில் நிற்கவும் உரிமையற்றிருந்த மாயாவுக்கு இந்தப் பயணம் பரம சுகமாய் இருந்தது.

காலை உணவைத் தங்கியிருக்கும் ஓட்டலில் முடித்துக் கொண்டு. ஒரு 'பிக்னிக்' கூடையுடன் ஒரு காரை எடுத்துக் கொண்டு கிளம்பினால் சுற்றி அலைந்துவிட்டு இரவு தூங்குவதற்குத்தான் திரும்புவார்கள். ஏற்கனவே சென்று பழக்கப்பட்ட இடம் என்பதால், தனியாக வழிகாட்டி அமர்த்தாமல், சத்யாகரே மனைவிக்கு எல்லா இடங்களையும் காட்ட முடிந்தது.

ஃபிரான்சில் உலக அதிசயங்களில் ஒன்றான ஈஃபில் டவரைக் காட்டினான். ஆனால் அதை விட அவன் அழைத்துச் சென்ற நடை பாதைகளும், பூங்காக்களும் மாயாவை அதிகம் கவர்ந்தன. வெனிசின் நீர் வழிகளும் அப்படியே. 'கண்டோலா'வில் பாட்டு கேட்டபடி போய்க் கொண்டே இருக்கலாம் போல இருந்தது அவளுக்கு. ஸ்விட்சர்லாந்தில் மாயாவுக்குக் கைக்கடிகாரம் வாங்கி



கொடுத்தான் அவன் கணவன். பெல்ஜியத்தில் இருவருமாக 'ஸ்பா'வில் குளித்தார்கள். டென்மார்க்கின் பூந் தோட்டங் களை விட்டு வரவே மாயாவுக்கு மனமில்லை. ஆம்ஸ்டர் டாமில் நெருநெரு என்று சென்ற நூற்றுக் கணக்கான சைக்கிள்களைப் பார்க்கும்போது இவர்கள் எப்படி ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டு விழாமல் நேரே போய் விடுகிறார்கள் என்று அதிசயப்பட்டாள்.

இறக்கை கட்டிக் கொண்டு பறந்த காலத்தில், இரண்டு விஷயங்கள் மட்டும் அவளுக்குப் பிடிக்காமல் போயின.

ஒன்று. அந்த மேலை நாட்டு மக்கள், காதல் உணர்ச்சியைச் சற்றும் மறையாமல் காட்டியவிதம் அதிலும் பூங்காக்கள் என்றால் கேட்கவே வேண்டாம். அப்படிப் பின்னிப் பிணைந்து கிடக்கும் ஜோடிகளின் மேல் சத்யாகரின் பார்வை தன் போக்காய் படிந்து மீண்டால்கூட மாயாவுக்கு மனதில் குற்ற உணர்வு இருக்கும். இது தேனிலவு என்பதும் கணவனுக்கு அவள் அநியாயம் செய்து கொண்டு இருப்பதும் அவளை மிகவும் பாதிக்கும்.

அதிலும் ஒருதரம் ரொம்பவும் அதிகமாக ஒட்டிக் கிடந்த இருவரைப் பார்த்துவிட்டு திரும்பி அறைக்கு வந்ததும், "இந்தக் காட்சிகள் உன் மனதைக் கொஞ்சம் கூடவா பாதிக்கவில்லை" என்று அவளை இழுத்து முத்தமிடவும் மாயாவுக்கு ரொம்பவும் வேதனையாகிப் போயிற்று. பேசாமல், சரியென்று விடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அவன் அதுபற்றி யோசித்துக் கொண்டிருந்தபோதே அவளை விட்டு விலகி, "நீ படுத்துத் தூங்கு. நான் திரும்பி

PK (36).JPG

வரத் தாமதமாகும்" என்று கூறி சத்யாகர் வெளியே சென்று விட்டான்.

வெகு நேரம் பல மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தவன் உடைகளைக் கூட மாற்றாமல் அப்படியே படுத்து உறங்கி விட்டான். காலையிலும் அவன் அயர்ந்து தூங்குவதைக் கண்ட மாயா அவனது காலணிகளை மெள்ளக் கழற்றி விட்டாள்.

என்னதான் மெதுவாகக் கழற்றினாலும், அது பற்றிய உணர்வே இல்லாமல் அடித்துப் போட்ட மாதிரி உறங்குகிறானே என்று உள்ளூர வியந்தபடியே 'ஸாக்சை'யும் கழற்றியவளுக்கு திக்கென்றது. அந்த அளவுக்குக் கன்றிச் சிவந்திருந்தன சத்யாகரின் பாதங்கள்! கரண்டைக்கால் பகுதி வீங்கியிருந்தன.

கழற்றிய 'ஸாக்ஸ்'களை எடுத்துப் பார்த்தாள். அவைகளின் பாதப் பகுதியில் ஒன்றிரண்டு ஓட்டைகள்!

இரவு முழுவதும் அவன் நடந்து கொண்டே இருந்திருக்கிறான்! கால்கள் புண்ணாகும் வரை அலுத்துக் களைத்து உடல் தானாகவே உறங்கும்வரை.

ஏன்?

அந்த வினாடியில், அவளது பத்தொன்பது வயதுக்கும் கூடுதலாகவே மனம் முதிர்ந்து, விடை கண்டுவிட, அவளது விழிகளில் குபுகுபுவென நீர் பெருகியது. எழுந்து சென்று க்ரீமை எடுத்து வந்து அவன் அருகே அமர்ந்து, அவன் கால்களில் இதமாய்த் தேய்த்து விட்டபோது கொஞ்சம்



ஆறுதலாக உணர்ந்தபோதும், அழுகை மட்டும் மட்டுப்படவில்லை.

அவளையும் மீறி இரண்டொரு கண்ணீர்த்துளிகள் அவன் கால்களில் பட்டுவிட்டதாலோ அல்லது அவளது இதமான வருடலிலோ, தூயில் கலைந்து விழித்தவன் முதலில் பிரமித்துப் போனான்.

"மாயா...ஷ்...என்னம்மா? ஏன்?" என்று பதறியபடியே அவன் எழவும் அவன் மார்பிலேயே சாய்ந்து அழுது தீர்த்தாள் மாயா.

சற்று அழுகை அடங்கியதும், "இந்த மாதிரி உங்களை வருத்திக் கொள்வதைவிட, நீங்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்" என்றாள் கேவல்களின் இடையே.

மாயாவின் கண்ணீர் முழுமையாக நிற்கும் வரை, அவள் முதுகை வருடியபடியே, அமர்ந்திருந்தான் சத்யாகர். பிறகு அவள் உச்சியில் முத்தமிட்டு, அவளை நிமிர்த்தி அமர வைத்தான். பார்வை உயராமல் அமர்ந்திருந்தவளைப் பார்க்கையில் அவன் முகத்தில் புன்னகை அரும்பியது. "அந்த மாதிரி தியாகமெல்லாம் அவசியம் இல்லை மாயா" என்று கையைத் திருப்பி மணி பார்த்தான். "அடடே, இவ்வளவு நேரமாகி விட்டதா? கிளம்ப வேண்டும்..." என்று எழ முயன்றான்.

பிடிவாதமாய் அவனைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள் மாயா. "கிளம்புவதும் கிடையாது ஒன்றும்

PK (37).JPG

கிடையாது. இன்று இந்த அறையை விட்டு வெளியே செல்லப் போவதும் கிடையாது. உங்கள் கால்களுக்கு முழு ஓய்வு. கீழே ஊன்றவே கூடாது" என்றாள் அதிகாரமாக.

"அம்போடா! அப்படியானால் குளிக்க கிளிக்க வேண்டுமானால் குளியலறைக்குத் தவழ்ந்துதான் போபாக வேண்டுமா? ரொம்பச் சின்ன வயதில் செய்தது. தவழ்வது எப்படி என்று மறந்து வேறு போய்விட்டதே! என்ன செய்வது?" என்று அவன் சோகம் காட்டவும் அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

ஆயினும், மற்றபடி அவள் பிடிவாதத்தை விடாததால் அன்று வெளியே செல்லாமல் அறையிலேயே தங்கினார்கள்.

ஏதேதோ பேச்சில் நேரமும் நன்றாகவே கழிந்தது. அதுவரை பார்த்து வந்தவைகளைப் பற்றி பேசியபோது "எல்லாம் மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது. அங்கங்கே கொஞ்சமும் நாகரிகமில்லாமல் இவர்கள் நடந்து கொள்வது தான் கஷ்டமாயிருக்கிறது" என்றாள் மாயா எரிச்சலுடன்.

"வாழத் தெரிந்தவர்கள்! உணர்ச்சிகளை அடக்காமல் வெளிப்படையாகக் காட்டுகிறார்கள்" என்றான் அவன் புன்சிரிப்புடன்.

"மற்ற உணர்ச்சிகளை மட்டும் அடக்கவில்லையா? செத்தால் கண்ணீரைக்கூட மறைத்து கம்பீரமாகக் காட்டிக் கொள்ளவில்லையா? கோபம், சோகம் எல்லாவற்றையும் அடக்கிக் கொள்ளத்தானே செய்கிறார்கள்? இது மட்டும் என்ன?" என்று வாதாடினாள் மனைவி.



"இதை மிக மிக முக்கியமானதாக-சுவாசிப்பது-சாப்பிடுவது போல அதிமுக்கியமாக எண்ணுகிறார்களோ என்னவோ?" என்றான் சத்யன்.

"என்ன பெரிய முக்கியம்? அதெல்லாம் சும்மா. பள்ளியைக் காதலித்தபோதுகூட அவனோடு தொட்டுப் பழக எனக்குத் தோன்றியதே இல்லை" என்று முடித்தவளிடம் சற்று நேரம் பேச்சு நின்று போனது. பருவம் கனிந்து அமர்ந்திருந்தவளின் மவுனத்தை அவன் கலைக்கவில்லை. ஆனால் ஒன்று அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு இருவருக்கும் இடையே இருந்த தடைகள் அகன்றாற்போல ஓர் எண்ணம் இருவருக்குமே உண்டாயிற்று.

இந்தப் பயணத்தில் மாயாவுக்குப் பிடிக்காத மற்றொன்று சத்யன், ஊர்சுற்றுவதோடு கொஞ்சம் வேலையையும் கவனித்தது. சின்னச் சின்ன உதிரி பாகங்களிலிருந்து பெரிய இயந்திரங்கள் வரை ஏற்றுமதி, இறக்குமதி இரண்டையுமே சத்யனின் கம்பெனி செய்து வந்தது. தயாரித்துக் கொடுப்பதும் உண்டு. தொழில் ரீதியாக சில மணி நேரங்கள் சென்று வருவதாக சத்யன் கிளம்பினாலே மாயாவுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும்.

சத்யன் எத்தனையோ புத்தகங்கள் வாங்கிக் கொடுத்த போதும், அருகில் 'வாக்கிங்' போய்வா என்றாலும், போரடித்துக் கொண்டு அறையிலேயே கிடந்து அடைபட்டாள் மாயா. சொன்ன நேரத்துக்கு ஒரு பத்து நிமிடங்கள் அவன் தாமதமாக வந்தாலும் தவியாய் தவித்து விடுவாள். மீண்டும் அவனைக் கண்ட பிறகும் அவன் கையைப் பற்றிக் கொண்டு அவனை ஒட்டிக்கொண்டே அலைவாள்.

PK (38).JPG

ஐரோப்பாவை முடித்துக்கொண்டு இருவருமாக லண்டன் சென்றனர். அங்கேதான் மாயா முதலில் கண்டுபிடித்தாள், சத்யாகர் அருகில் இல்லாவிட்டால் எப்பேர்ப்பட்ட எழில் காட்சிகளும் சற்றும் ரசிப்பது இல்லை என்று.

ஒருநாள் 'ட்யூப்' ரயிலில் அழைத்துச் சென்று காட்டியவன் அடுத்து இரு நாட்களும் மாயாவை ஊர் சுற்றிக் காட்டும் பஸ்சில் ஏற்றிவிட்டு விட்டுத் தன் வேலையை கவனிக்கப் போனான். இந்தியர்களே அந்த பஸ்சில். இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் இருந்தார்கள். 'பிக்பென்' மணிக்கூண்டு, அரண்மனை எல்லாவற்றையும் மற்றவர்கள் ஆகா, ஓகோ என்கையில் மாயாவுக்கு எல்லாமே உப்புச்சப்பற்று டல்லடித்துப் போயிற்று.

ஒருவேளை உப்புதான் கொஞ்சம் டல்லாக இருந்தது. இதனால் ரசனையற்றுப் போயிற்றோ என்று மறுநாளும், கொஞ்சமும் பிரியமில்லாத போதும், பிடிவாதமாகக் கிளம்பிச் சென்றாள் மாயா ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே விஷயம் அது இல்லை என்று புரிந்து விட்டது. அனாவசியமாக அலையப் பிடிக்காமல், வழிகாட்டியிடம் 'சாரி'யுடன் ஒரு டாக்சியில் ஓட்டலுக்குத் திரும்பிவிட்டாள்.

ஏன் இப்படி என்று மனம் குழம்பியது.

சத்யாகர் ஓர் அருமையான துணைதான் சிறு கேலி கலந்து அவன் பேசுவது நன்றாகவே இருக்கும் என்றாலும் மற்றதெல்லாம் வெறுத்துப் போக வேண்டியது இல்லையே!

மாயாவைப் பொறுத்தவரை, ஒன்றுமில்லாததில் கூட எதையாவது தேடிப் பிடித்து ரசிக்கிறவள் அவள். அவளது



அறைக்குள்ளேயே இருக்கவேண்டி வந்த நிலையிலும், தரையில் மொசைக் துகள்களில் ஏதாவது உருவம் கண்டு பிடிப்பாள். பாண்டியோடு செல்ல முடியாமல் பிடிபட்டு, அடிபட்டு, அடைபட்டு கிடந்த அன்று கூட, பந்தக் குவியல் போல் மிதந்த வெண்மேகக் கூட்டம் காற்றில் கலைப்புண்ட யானை போலும் கரடி போலும் மாறியதைப் பார்த்துக் கொண்டிருந்தாளே...

பாண்டி! இத்தனை நாள் அவனைப் பற்றிய நினைவே வரவில்லையே பாவம் அவன்! எங்கே எப்படி இருக்கிறானோ?

பாண்டியைப் பற்றி எண்ணமிட முயன்ற போதே, இன்று சத்யாகர் வேலையைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு திரும்பி விட்டால் நன்றாயிருக்குமே. வேலை முடிந்த பிறகும் மனைவி வர நேரமாகும் என்று அங்கேயே இருந்து விடக்கூடாது என்று அவள் மனம் ஏங்கியது.

வெளிநாட்டுப் பயணம், விருந்தாடல் எல்லாம் முடிந்து, மாயா புகுந்த வீட்டு வாழ்வுக்கு இலகுவாகப் பழக்கப்பட்டு விட்டபிறகு, அவளது வாழ்வில் அதி முக்கியமான திருப்பம் நிகழ்ந்தது.

எதிர்பாராத விதமாக அவள் பாண்டியனைச் சந்தித்தாள்.

PK (39).JPG



7

**ச**த்யாகரின் குடும்பம் வசித்தது கோவை மாநகரில்.

கோவை, விரிவடைந்து கொண்டே இருக்கும் ஒரு தொழில் நகரம் என்பதால் சத்யாகரின் குடும்பத் தொழிலும் விருத்தியடைந்து கொண்டே இருந்தது.

பொதுவாக, கோவை வாசம் மாயாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அங்குள்ள மிதமான தட்ப வெப்பம் பிடித்தது. நல்ல பராமரிப்பில் செழித்து வளர்ந்த தோட்டம் பிடித்தது. இரவு நேரங்களில் மலைக் காடுகளில் தீ எரிவதைக் கண் கொட்டாமல் பார்க்கப் பிடித்தது. மற்றதற்கெல்லாம் மேலாக அவள் மீது அன்பைப் பொழிந்த மாமனார் மாமியாரைப் பிடித்தது. அதிலும் மாமியார் அவளை விதம் விதமாய் அலங்கரிக்கும்போது, பெற்ற தாய் கூட இப்படிச் செய்ததில்லையே என்று தோன்றும்.

ஆனால், தேனிலவாக அமையாத தேனிலவைக்கூட இனிமையாகவே அனுபவிக்க வைத்த கணவன், சற்று விலகிப் போய்விட்டது போன்ற உணர்வுதான் அவளுக்குக் கொஞ்சம் சஞ்சலத்தை அளித்தது.

சுற்றுப்பயணம் என்பது விடுமுறைபோல; எந்தவிதக் கடமையும் கட்டுப்பாடும் கிடையாது; இப்போது, ரத்த அழுத்தக்காரத் தந்தையின் பொறுப்பையும் சேர்த்துக் கவனிக்க வேண்டியிருப்பதால் தாமதமாக வருகிறான். எனவே முன்போலப் பேசிக் கொண்டு இருக்க முடியவில்லை என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்ள



முயன்றாள் மாயா. ஆனால் இரவில் தனிமை நேர்ந்ததுமே சத்யாகர் உம்மணாமூஞ்சி ஆகிவிடுவதும், விழுந்தடித்துக் கொண்டு படுத்து உறங்கி விடுவதும் அவளுக்கு மிகவும் கஷ்டமாகவே இருந்தது.

இதன் காரணம் வேலை மிகுதி என்று எண்ணியது தவறோ என்ற சந்தேகம் தோன்றி, அது கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெறவும் மாயா கலங்கிப் போனாள். மாயாவைத் திருமணம் செய்து கொண்டதை எண்ணி அவன் உள்ளூர வருத்தப்படத் தொடங்கி விட்டான் என்று நிச்சயமாகவே நினைக்கத் தொடங்கினாள் மாயா; நியாயம் தானே? இந்த மாதிரி அரைகுறை மனைவியை எண்ணி யாரால் மகிழ முடியும்?

இச்சமயத்தில், அவளை இன்னமும் அலைக்கழிக்க வென்று இன்னொன்று நடந்தது.

ஒருநாள் அவர்களது வீட்டிற்கு விருந்தாளிகளாக ஒரு குடும்பம்-தந்தை, தாய், மகள், மகன் அடங்கியது வந்தது.

யு.எஸ். போயிருந்ததாகவும், அருகே சத்யாகருடைய தமக்கையைப் பார்த்ததாகவும் சொன்னார்கள்.

திருமணத்துக்கு வந்த மகள் விரைவிலேயே திரும்பிச் சென்று விட்டது இங்குள்ள பெரியவர்களுக்குச் சற்று வருத்தம்தான். எனவே நடேசன் தம்பதியினர் மகளைப் பற்றிய பேச்சில் ஆழ்ந்தனர்.

அந்தப் பெண் மோகனா, மாயாவின் அருகில் வந்து நின்று அவளை ஏற இறங்க முறைத்துப் பார்த்தாள். "நான்

PK (40).JPG

இல்லாத நேரமாகப் பார்த்து, என் சத்துணவை ('சத்து' என்று செல்லமாக அழைக்கத் தொடங்கியதாம். கேலியில் மருவிக் 'சத்துண'வாகிவிட்டது. என்பது மாயா, பிற்பாடு அறிந்து கொண்ட விளக்கம்! நீ பறித்துக் கொண்டாயா? ஆகா! நான விடுகிறவள். இரு இரு கொஞ்ச நாளில் என்ன செய்கிறேன் பார்" என்று தலையை ஆட்டிக் கண்ணை உருட்டி, சுட்டு விரல் நீட்டி பேசவும் எல்லோரும் சிரித்தனர்.

அப்போதே வேறுபாடாகத் தெரியக் கூடாது என்றுதான் வாயைக் காதுவரை இழுத்து வைத்தாள் மாயா.

முதலில் இந்த மோகனாவைத்தான் சத்யாகருக்குப் பார்த்தார்கள் என்று தெரிந்த பிறகோ அவளால் தாங்க முடியவில்லை.

மோகனாவும் அவளது தம்பியும் சத்யாகரையே ஒட்டிக் கொண்டு இருந்தது ஒரே வெறுப்பாக இருந்தது.

இந்த அழகில், இவர்களுக்கு வீட்டில் விருந்து என்றதுமே மாயா தீர்மானித்து விட்டாள். இந்த 'சிக்' உடை சிங்காரியைவிட தானே உயர்வு என்று காட்டிவிட வேண்டும் என்று.

அந்த எண்ணத்தில், உடை தேர்ந்தெடுத்து வைத்து விட்டு பியூட்டி பார்லரில் கூந்தல் அலங்காரத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போதுதான் மாயா பாண்டியனைச் சந்தித்தாள்.

நகர்ப்புறம் கடக்கும்வரை சும்மா வந்த கார், திடுமென வேகம் குறைந்து, வீட்டுக்குச் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் நின்றே போயிற்று.



சற்று நேரம் போராடிப் பார்த்து விட்டு "கொஞ்ச தூரத்திலே ஒரு 'மெக்கானிக் ஷெட்' இருக்குதும்மா. அங்கே போய், யாரையாவது இட்டாரேன்." என்று சென்றான் டிரைவர்.

விருந்தினர் வருமுன் நன்றாக அலங்கரித்துக் கொள்ள எண்ணினால் இது என்ன தொல்லை என்று எரிச்சல் பட்டபடி உட்கார்ந்திருந்தாள் மாயா.

"கொஞ்சம் 'பார்ட்ஸ்'" சங்க வாங்கப் பையனோட டிரைவரை அனுப்பிச்சிருக்கேன்மா. அவங்க வராங் காட்டியும் நான் டைனமோவைக் கழட்டிரலாம்னு..." என்று மொபெட்டில் வந்து நின்றவன் பாண்டியன்..

"பாண்டியன்" என்றாள் மாயா ஆச்சரியத்துடன்.

அப்போது பாண்டியனுக்கு இருபதோ இருபத்தொன்றோ என்றான். இப்போது மிஞ்சி இருபத்து நாலாகத்தான் இருக்க வேண்டும். அதற்குள் இவனுக்குத் தொப்பை வைத்து விட்டதே! இவனை விடவும் நாலு வயது மூத்தவனான சத்யாகரின் வளமும் வனப்புமான உடல் கட்டு நினைவு வர, உள்ளூரப் பெருமையாக உணர்ந்தாள் மாயா.

கூடவே இன்னோர் ஆச்சரியம்: முன்பு இவனைப் பார்த்தாலே உள்ளம் குளிரும். இப்போது ஒன்றுமே தோன்ற வில்லையே! கல்லூரியில் 'ரிடையர்' ஆன கணக்கரை சந்தித்தது போல ஏதோ தெரிந்த ஆளைப் பார்க்கிற ஒரு சிறு இதம் தவிர ஒன்றுமே இல்லையே. அடுத்து ஒரு தரம் பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் கூட வரவில்லையே!... ஆனால் அவன் எப்படி இருக்கிறானோ தெரிய வில்லையே!

"இங்கே எங்கே பாண்டி?" என்று விசாரித்தாள் மாயா.

ஆனால் பாண்டியனின் முகம் கறுத்தது. சற்றுத் தயங்கி நின்றவன் "அது... என்னோட மெக்கானிக் ஷெட் தான்... வந்து... வீட்டிலே அப்பா சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கிறேன். எல்லாம் அய்யா கொடுத்த பணம்தான். முதல்லே கோபம்தான். பணக்காரன் என்கிறதாலே விலைக்கு வாங்கறாங்க என்று. ஆனால் என் அப்பா பேச்சு கேட்ட பிறகுதான் புரிஞ்சது... அன்னைக்கு 'அசால்'டா கிளம்பினோமே, என்னத்தை சாப்பிட்டிருப்போம். எங்கே தங்கியிருப்போம்? அதிலேயும் மாயம்மா வளர்ந்த முறைக்கு நாலு நாள் தாக்குப் பிடித்திருப்போமா?"

"அய்யா கொடுத்த பணத்தை நான் வீணாக்கலை. முதல்ல ஒரு வருஷம் பயிற்சி எடுத்துக்கிட்டேன். இங்கே 'மெக்கானிக் ஷெட்' போட்டேன். ஊரிலே ஒருத்தியைக் கட்டிகிட்டு வந்தேன் வளர்ச்சிதான். 'லைன்' வீட்டிலே ஒன்னு வாங்கியிருக்கேன். பெண்டாட்டி ரொம்ப அழகில்லே. ஆனால் வளர்ச்சிக்குக் காரணம் அவளும்தான். பால்மாடு பார்த்துக் கொள்கிறா. காலைல ஐந்து மணிக்கு எழுந்தாள்னா பம்பரம்தான். மாட்டைப் பார்த்து, வீட்டைப் பார்த்து, பால் கறந்து, சாணி தட்டி...ராவிலே, 'கிரீஸ்' போகத் தேய்த்து எனக்கு வெந்நீர் ஊற்றி விடுகிற வரைக்கும் அவள் தான்."

"குறையாச் சொல்லலை. ஆனா இதெல்லாம் நீ...நீங்க செய்ய முடியுமா? செய்யச் சொல்றதே பாவம்... "ஆட்டுக்கு வால் ஆண்டவன் அளந்துதான் வைப்பான்" என்று எங்க அய்யன் சொல்வார். அவங்கவங்களுக்கு உரிய வாழ்வு



அமைஞ்சால்தான் சந்தோஷம். நான் நல்லாயிருக்கேன். நீங்களும் அப்படித்தான் தெரியுது..." என்று முடித்தான்.

"நீங்கள் என்று சொல்ல வேண்டாம், பாண்டியன்."

"அது சரியில்லைம்மா. அன்னைக்கு நாம் இரண்டு பேருமே அறியாப் பிள்ளைகள்தான். இன்னைக்கு அவங்கவங்க நிலைமையை அனுசரித்து நடக்கிறது தான் சரி" என்றான் அவன் தெளிவுடன்.

அவளுக்கும் கூண்டிலிருந்து விடுதலை பெற்றாற் போல ஓர் உணர்வு. பறப்பதற்குச் சிறகு இல்லாத குறைதான்.

நன்றி செலுத்த வாய் திறக்கையில், சத்யாகரின் கார் வந்து நின்றது. காரை ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கி வந்து விசாரித்தான்.

"கார் நின்றுவிட்டது. பாண்டியன் ரிப்பேர் பார்க்கிறார்..."

அவள் முடிக்குமுன் குறுக்கிட்டு "சரி சரி. அந்தக் காரில் ஏறு. டிரைவர் இதைச் சரி செய்து கொண்டு வரட்டும். சீக்கிரம்" என்று மனைவியைப் பணித்துவிட்டு, "எவ்வளவு ஆகும் மெக்கானிக்?" என்று பாண்டியனிடம் கேட்டான்.

"சாமானுங்க ஒரு முன்னூறு, கூலி நூறு ஆகும் சார்" என்றான் பாண்டியன்,

அதற்குள் டிரைவர் வந்து சேரவே, அவனிடம் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து, "ரிப்பேர் ஆனதும் காரை எடுத்து வா" என்று கூறி மனைவியிடம் திரும்பினான். "இன்னமும் ஏறவில்லை? வீட்டில் விருந்து வேலைகளைப் பார்க்க வேண்டாமா?" என்றான்.

PK (42).JPG

"வருகிறேன் பாண்டியன்" என்று விடை பெற்று, மாயா காரில் ஏறவும் வேகமாகக் கார் கிளம்பியது.

கணவன் புறம் திரும்பி, "நான் சொன்ன 'பாண்டி' இவர்தான்..." என்று தொடங்கிய மாயா, அவன் புருவம் சுளித்து ஏதோ தீவிர சிந்தனையில் இருக்கவும் மேலே பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

மாமியார் மனதாரப் பாராட்டிய மாயாவின் அலங்காரம் அவளுடைய கணவனின் கண்களில் படாமலே போயிற்று. ஆனால், அதை விடவும் அவளுடைய முக்கியமான சமாச்சாரத்தைத் சத்யாகரிடம் சொல்ல முடியாமல் போனதுதான் அவளுக்கு வருத்தமாக இருந்தது.

விருந்து முடிந்து விருந்தாளிகள் சென்றதுமே, தொழிற்சாலையில் கொஞ்சம் வேலையிருப்பதாக சொல்லி அவனும் கிளம்பிவிட்டான். இரவு வீடு திரும்பாதது மட்டுமல்லாமல், மறுநாள் காலையில் அன்றைய விமானத்தில் டெல்லிக்குச் செல்வதாகவும் நாலு நாளைக்குத் துணிமணி அனுப்புமாறும் டெலிபோனிலேயே காரியத்தை முடித்துக் கொண்டது வேறு.

இதைவிடவும் அவள் நெஞ்சில் தைத்தது, விமான நிலையத்திலிருந்து, மாயா பிரியப்பட்டால் அவளுடைய பெற்றோரிடம் அவளை அனுப்பி வைக்கும்படி நடேசனிடம் அவன் சொன்னதுதான்.

வெறும் வார்த்தை அளவில் எடுத்து, மருமகளிடம் வந்து, "போக வேண்டுமா அம்மா" என்று அவர் கேட்க, யோசித்துச் சொல்வதாகக் கூறி விட்டு தனியறைக்குள் வந்து விழுந்தாள் மாயா.



என்ன ஆயிற்று? 'நானாக ஒரு நாளும் அனுப்ப மாட்டேன்' என்றானே? 'இன்று நீயாக போ' என்பது போல ஏன் பேச வேண்டும்? இவன் இப்படி மாற, அதிலும் ஒரேயடியாக மாறும்படி என்ன நடந்தது?

மோகனாவின் நினைவு ஒரு கணம் வந்து உடனே மறைந்தது.

இல்லை. அவள் காரணம் இல்லை. அவன் விரும்பியிருந்தால் அவளை முன்பே அவன் மணந்திருக்க முடியும் இது வேறு...

சட்டென நிமிர்ந்து அமர்ந்தாள் மாயா.

பாண்டி! அவனைப் பார்த்தவுடன் கடவுளே!

தன்னை அறியாமல் கலகலவென்று சிரித்து விட்டு உடனே கையால் வாயைக் கப்பென்று பொத்திக் கொண்டாள் அவள். தனியே இருந்து சிரித்தால் பார்க்கிறவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றாதா?

இங்கே அவளாக, எல்லா விதத்திலும் தடை அகன்று, அவனைக் கணவனாக ஏற்கத் தயாராக இருப்பதைச் சொல்ல வந்தால், இவன் ஏறுமாறாக எதையோ நினைத்து எங்கேயோ போகிறானே!

அவன் டெல்லி போய்ச் சேர்ந்த பிறகு, அவன் தங்கும் ஓட்டலில்தான் அவனைப் பிடிக்க முடியும். உண்மை அறிந்தால் என்ன சொல்லுவான்? இனி அறைகுறை வாழ்வு இல்லை என்று அறியும்போது அவனுக்கு எப்படி இருக்கும்?

PK (43).JPG

பொதுவாக வெளியூர் சென்றால் வேலை முடிந்து வந்து இரவில் தந்தையிடம் பேசுவது சத்யாகரின் வழக்கம். இன்று இரவு அவன் போன் செய்யும் போது அவள்தான் எடுத்துப் பேசப் போகிறாள்... இன்னமும் சில மணி நேரங்கள் ஆவலாகக் காத்திருந்தாள் மாயா...

ஆனால், அந்த இன்னும் சில மணி நேரங்கள் கழியும் முன்பாகவே அவள் தலையில் இடி விழுந்தது. சத்யாகர் சென்ற விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுவிட்டது என்று அலுவலக மானேஜர் சொன்ன செய்தி கேட்டதும் மாயா மயங்கி விழுந்தாள்.

ரத்த அழுத்தம், இதய பலவீனம் என்றிருந்த பெரியவர்களைத் தேவைப்பட்டால் கவனிக்க என்று நிர்வாகியால் அழைத்து வரப்பட்டிருந்த குடும்ப டாக்டர் மாயாவுக்கு வைத்தியம் செய்யும்படி ஆயிற்று.

மத்திம வயதைத் தாண்டி முதுமையை எட்டிக் கொண்டிருந்த பெரியவர்கள் இருவரும் மருமகளுக்கு ஆறுதல் கூறினர்.

ஆனால் மாயாவின் மனம் சமாதானம் அடைய மறுத்தது. சத்யாகருக்கு ஏதாவது ஆகி விட்டால் அவள் என்ன செய்வாள்? அப்புறம் அவளால் உயிருடன் இருக்கவே முடியாதே!

அடைத்துக் கொண்டு வந்த நெஞ்சை அழுத்தி விட்டவளுக்கு ஒரு மிகப்பெரிய உண்மை புரிந்தது. பாண்டியன் விஷயமாக பரிபூரண விடுதலை அடைந்து விட்டதால் ஒரு சாதாரண மனைவியாகக் கணவனை ஏற்க



அவள் மனம் தயாராகிவிட்டதாக நினைத்தாளே. எவ்வளவு பெரிய மடத்தனம். உள்ளே அடைந்து கிடந்த தூசு துரும்பு ஒட்டடை அத்தனையையும் வெளியேற்றிவிட்டு, அவள் மனம் முழுவதும் சத்யாகர் நிறைந்து விட்டிருந்ததால் அல்லவா அவளுக்கு அந்த விடுதலையே கிட்டியிருக்கிறது.

இது புரியாமல் இவ்வளவு நாட்களும் அவள் எவ்வளவு முட்டாளாக இருந்து விட்டாள். இப்போது அது புரிவதும், அவன் நல்லபடியாக திரும்பி வருவானா மாட்டானா என்ற நிலையிலா ஏற்பட வேண்டும்?

அவளுடைய கணவனை அவள் நேசிப்பது, கண்ணை விற்று வாங்கும் சித்திரமாகிவிடுமா?

எண்ணும்போதே திகிலில் அவள் உடல் நடுங்கியது.

அவளைப் பரிவுடன் நோக்கி, "பயப்பட வேண்டாம், அம்மா பணயக் கைதிகளையும், விமானத்தையும் காப்பாற்ற கடத்தல்காரர்களோடு அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறதாம். செய்தி வந்திருக்கிறது" என்று இவளுக்கு ஆறுதல் கூறுவதாக எண்ணிப் பேசினார் நிர்வாகி.

விலுக்கென நிமிர்ந்தாள் மாயா.

பேச்சு வார்த்தையா? குடி கெட்டதே! அவனுக்குப் பிடிக்காதே!

தேனிலவுப் பயணத்தின்போது பேசிய எத்தனையோ விஷயங்களில் விமானக் கடத்தல் பற்றி சத்யாகர் கூறியது நினைவு வரவும் மாயா ஒரேயடியாக இடிந்து போனாள்.

PK (44).JPG

PK (45).JPG

முடியாப் பகலே விடியா இரவே என்று பல மணி நேரங்கள் கும்மிருட்டிலேயே கழிந்தன.

இதற்குள்ளாக, மூன்று முறை மாத்திரை பாட்டிலைக் கையில் எடுத்துவிட்டுக் கீழே வைத்தாள் மாயா. நம்ப முடியாத அற்புதமாக, ஒருவேளை சத்யாகர் உயிருடன் திரும்பி வந்தால், அவளது அன்பை அவனிடம் தெரிவிப்பதற்கேனும் அவள் உயிருடன் இருக்க வேண்டுமே! இந்த எண்ணம் மட்டுமே, அந்த மாத்திரைகளை விழுங்க விடாமல் அவளைத் தடுத்தது.

வெகுநேரம் கழித்து, "அம்மா, அம்மா இங்கே வாருங்கள், தீவிரவாதிகள் சரணடைந்து விட்டார்களாம், யாருக்கும் எதுவும் இல்லையாம்" என்று உரக்க நிர்வாகியின் குரல் கேட்டது.

மாயாவால் நம்ப முடியவில்லை.

யாருக்கும் எதுவும் செய்யாமல் சரணடைகிறவர்கள் எதற்கு விமானத்தைக் கடத்தப் போகிறார்கள்?

டில்லியில் பார்க்க வேண்டிய திருவாளர் வெங்கட்ராமனும் இதே விமானத்தில் இருந்தவர், அவர் இப்போது எந்த வேலையையும் பார்க்கக்கூடிய நிலையில் இல்லை என்பதால் திரும்பிவருவதாக சத்யாகர் சொன்னபோதும் கூட அவளுக்கு நம்பிக்கை இல்லை.

கை, கால் போயிருந்தால் டெலிபோனால் காட்ட முடியுமா, என்ன?

விமானத்திலிருந்து இறங்கி, 'லவுஞ்சி'லிருந்து வெளியே வந்த கணவனை ஒரு முறை முழுமையாகப் பார்த்த மாயா,



சுற்றுப்புறம் சூழ இருந்தவர்கள் பற்றிய எண்ணமே இல்லாமல் அவனிடம் ஓடினாள். அவனைத் தொட்டு, வருடி, கட்டி அணைத்து முத்த மழை பொழிந்தாள்.

மனைவியை ஆசுவாசப்படுத்த முயன்று தோற்ற சத்யாகர், அவளை அணைத்துப் பாதி தூக்கியவாறே காருக்கு அழைத்து வந்தான்.

ஒருவாறு சுயநினைவு வந்தபோதும், அவனை விட்டு விலகாமல் அவன் தோளைப் பற்றியவாறே நின்றாள் மாயா. ஊராவது உலகமாவது? யார் என்ன நினைத்தாலும் அவளுக்கு அக்கறை இல்லை.

முழு நேரமும் கூட இருந்த நிர்வாகிக்கும், பின்னர் விஷயம் அறிந்து விமான நிலையத்துக்கு வந்திருந்த மோகனா குடும்பத்துக்கும் அவள் நன்றி உரைத்தபோது மோகனா கண்ணடித்தாள்.

"சத்துணவு, நீ படா லக்கி மேன்யா. இப்படி ஓர் அன்பு யாருக்குக் கிடைக்கும்? அனுபவி ராஜா அனுபவி" என்று சிரித்தாள்.

மாயாவின் கன்னத்தில் முத்தமிட்டு, "நீங்கள் இருவரும் இப்படி ஒட்டி நிற்கும்போது,கொழு கொழும்பும் அதைத் தழுவிப் படர்ந்த பூங்கொடியும் போல எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா?" என்று அவள் மொழிந்தபோது மாயாவுக்கு இன்னும் ஒரு திரை விலகியது.

இந்த வெகுளிப் பெண்ணிடம் பொறாமைப் பட்டாளே!

வீட்டுக்குச் செல்லும்போதே நடந்த விவரங்களை அவர்களுக்குச் சொன்னான் சத்யாகர்.

PK (46).JPG

"ஒரு ரகசிய இடத்தில் விமானத்தை இறக்கிய தீவிரவாதிகள் விமானம் கடத்தப்பட்டது தவிர முதலில் எந்தவிதத் தகவலும் கொடுக்கவில்லை. நேரம் ஆக ஆக பேரத்தை உயர்த்தலாம் என்பது அவர்கள் எண்ணம்.

"சக பயணிகளிடம் பேசிப் பார்த்தபோது உயிருக்கு பயந்து. யாரும் விரல் அசைக்கவும் தயார் இல்லை. ஒரே ஒரு கர்ப்பிணி பெண் மட்டும் அவனுக்குத் துணை வந்தாள். பிரசவத்துக்காக, டில்லியில் இருந்த தாய் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தாள் அவள்.

"இருவருமாக எவ்வளவோ பேசிப் பார்த்தும் யாருமே இரங்கவில்லை. ஆனால் அவர்களில் ஒருவன் அவர்களிடம் மரியாதையாகப் பேசினான்.

"எங்கள் இருவரையும் பார்த்து இன்னும் பல பேர் எங்களோடு சேர்ந்தார்கள்; இன்னும் கொஞ்சம் துணிந்தார்கள் என்றால் தீவிரவாதிகள் மேல் பாய்ந்து விடலாம் என்று நினைத்தேன்.

"ஆனால் அதற்குள் அந்த தீவிரவாதிகள் இருவரில் ஒருவன் முரடன், உன்னால்தான் என்று அந்த கர்ப்பிணிப் பெண்ணைத் தள்ளிவிட இசகு பிசகாக விழுந்ததில், அவளுக்கு வலியெடுத்து விட்டது.

"இந்த மாதிரி விஷயம் தெரிந்தவர்கள் பயணிகளில் யாரும் இல்லாது போக, தீவிரவாதிகளில் ஒருவனே நாலு ஆண்டுகள் மருத்துவம் படித்தவனாம் அவன். அந்தப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்தான்.



"ஒரு குழந்தையை உலகத்துக்கு கொண்டு வந்த அவனுக்கு இளகிவிட்டது.

"அப்புறம் ஒருவன் தானே? பிடித்துக் கட்டி வைத்து விட்டுத் தகவல் கொடுத்தோம்.."

"அந்தப் பெண்ணுக்கு ஒன்றுமில்லையேப்பா?" என்று சற்றுக் கவலையுடன் கேட்டார் சிவகாமி.

"ரொம்பவும் துணிவுள்ள பெண். இன்னும் பத்தே நாளில் பிள்ளை பிறக்கக் கூடும் என்று டாக்டர் நாள் குறித்த பிறகுதான் தாயார் வீட்டுக்குக் கிளம்பியிருக்கிறாள்... எனக்கு உங்களைப் பற்றித்தான் கவலையாக இருந்தது. என்ன மாதிரிச் செய்தி கிடைத்து, எப்படிக் கவலைப்படுகிறீர்களோ... என்று.."

பெற்றோரின் உடல்நிலை பற்றி அவள் சொல்லாமல் சொன்னது புரிந்து நடேசன் பதில் அளித்தார்... "சும்மா என்றால் எப்படி இருந்திருப்போமா? மாயா மயங்கி விழுந்து விட்டாளா. அவளைக் கவனிப்பதில் எங்கள் உடம்பு பற்றி மறந்தே போயிற்று. நிர்வாகி வேறு, டாக்டரையும் கூடவே கூட்டி வந்திருந்தார். அதனால் பிரச்சினை இல்லை" என்றார்.

அவர்களது தனியறைக்குள் சென்ற பிறகும் மாயா, கணவனை விட்டு அகன்றாளில்லை. "சுவாசிப்பது, சாப்பிடுவது போல முக்கியம் என்றால் என்னவென்று இப்பொழுது புரிகிறது" என்று சற்றும் வெட்கமின்றி கணவனை ஒட்டிக்கொண்டாள் அவள்.

PK (47).JPG

சற்று நேரம் மாயாவின் எந்த உறுப்புகள் மீதும் அவளுக்கு ஆதிக்கம் இல்லாது போயிற்று.

சத்யாகர், மனைவியைச் சற்றே விலக்கி நிறுத்தியபோது இருவருக்குமே மூச்சு வாங்கியது. அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டு, "இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு ஒரு வார்த்தை சொல்லவில்லையே மாயூ" என்றான் வியப்புடன்.

"அது... பாண்டியனைப் பார்க்கும் வரை எனக்கே சரியாகத் தெரியாதே..." என்றவள்; சட்டென நினைவு வர "என்னைச் சொல்லுகிறீர்களே, நீங்கள் எப்படியாம்? முகத்தைக்கூட பாராமல் திருப்பிக் கொண்டு உம்மணாமூஞ்சியாய் இருந்தீர்களே..." என்று மடக்கினாள்.

"அது... அது வந்து மாயா, நான் என்ன செய்யட்டும், சொல்லு? நான் சாதாரண மனிதன் அதிலும் உன் மேல் ஆசை கொண்டு மணந்தவன். சும்மாவே அழகியான நீ, அம்மாவின் அலங்காரத்தில் ஜொலிக்கும் போது எனக்கு என்னமாய் வரும் தெரியுமா? கட்டுப்பாடு மீறி ஏதாவது செய்துவிட்டு உள்ள முன்னேற்றத்தையும் நாசப்படுத்தி விடக்கூடாதே என்ற பயம் எனக்கு. பாராமல் பேசாமல் இருந்துவிட்டால், கட்டுப்பாட்டை மீறாமலும் இருக்க முடியுமல்லவா?"

"ஓகோ...!" புன்னகையோடு கணவன் பேச்சை ஜீரணித்தவள், இன்னொரு விளக்கம் கேட்டாள். "உங்க முன்னேற்றத்தையும் என்றீர்களே எப்படி?"



நெற்றியில் முத்தமிட்டு அவன் சொன்னான் "ஆமாம். முன்னேற்றமேதான். அன்றைக்கு என் கால் வலிக்காக அழுது தியாகம் செய்ய முன் வந்தாயே, அப்போதிருந்தே நிச்சயம்தான். பிறகு லண்டனில் [illegible] இடையிலேயே திரும்பி வந்தாயே. அதெல்லாம் என் திசையில் நீ எடுத்து வைத்த ஒவ்வோர் எட்டுகள்தான். அதெல்லாம் பற்றி நீ யோசிக்கவே இல்லையா?" என்று கேட்டான் சத்யாகர்.

"யோசித்தேன். ஆனால் புரிந்தால்தானே?" என்று உதட்டைப் பிதுக்கினாள் மாயா.

"அதானே; புரிவதற்கு உள்ளேயும் கொஞ்சம் வேண்டுமில்லையா?" என்று சாது போல சத்யாகர் கூறினான்.

"என்னது?" என்று கண்ணை உருட்ட முயன்றவளுக்குச் சிரிப்புதான் வந்தது. சிரித்து முடித்துவிட்டு "உள்ளூரா. ஒரு முறை தான் காதல் வரும். பாண்டியன் நினைவுதான் கால முழுவதற்கும்..." என்று ஏதேதோ உருப்போட்டு வைத்திருந்தால் இந்த விளக்கம் புரியவே இல்லை. ஆனால் பாண்டியனைப் பார்த்த போது ஒன்றுமே தோன்றவில்லை; பாண்டியன் தன் மனைவி பற்றிப் பேசியபோது நிம்மதியாகத் தான் இருந்தது என்றபோதும் பழசிலிருந்து விடுதலை என்றுதான் நினைத்தேன்."

"ஆக பாண்டியனுக்கு நன்றி செலுத்த வேண்டுமாக்கும்!"

"இல்லை. அந்தத் தீவிரவாதிகளுக்கு அப்பப்பா! என்ன பாடுபட்டுப் போனேன், தெரியுமா" தூக்கமாத்திரை பற்றி

PK (48).JPG

சொல்லப் போனவள் நிறுத்திக் கொண்டாள். இந்த இனிய நேரத்தில் அது எதற்கு?

மனைவியின் எண்ணத்தை ஆமோதிப்பவன் போல, "இந்த இனிமையான நேரத்தில் அந்தக் கசப்பான எண்ணங்கள் எதற்கு. அதைவிட அதிமுக்கியமான வேலைகள் நமக்கு எத்தனையோ இருக்கின்றனவே!" என்று மாயாவின் செவ்விதழ்களை நோக்கிக் குனிந்தான் சத்யாகர்.

PK (49).JPG